# பெண்ணால் முடியும்



1

வாசற்படியில் முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த நந்திதா - தலையைத் திருப்பி - கூடத்தின் மேஜை மேலிருந்த டைம்பீஸைப் பார்த்தாள். இருட்டில் ரேடியம் முட்கள் நேரத்தைச் சொல்லியது.

மணி 11-10.

அந்தத் தெருவின் சத்தங்களெல்லாம் கரைந்து போய் - தெருவே நிசப்தத்தில் விழுந்து கிடந்தது. வழக்கமாய்ப் பன்னிரண்டு மணி வரை - ஒரு நாற்பது வாட்ஸ் பல்பைக் கையில் பிடித்துக் கொண்டு - காருக்குக் கீழே படுத்து வேலை பார்க்கும் ஆட்டோ மொபைல்ஸ் கோபால்கூட - அன்றைக்குச் சீக்கிரமாகவே ஒர்க்ஷாப்பைப் பூட்டிக் கொண்டு வீட்டுக்குப் போயிருந்தான்.

தெருக் கோடியிலிருந்த மில்க் பார் மட்டும் நாடாத் திரி விளக்கோடு உயிரோடு இருந்தது.



MithraVintha

நந்திதா பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்தக் காடா விளக்கும் அணைக்கப்பட்டு - கதவுகள் சாத்தப்பட - சுகுமார் வெளியே வந்தான். இருபத்தாறு வயது இளைஞனான சுகுமார் ஒரு வேலையில்லாப் பட்டதாரி. இந்திய அரசுக்கு உடைமையாக்கப்பட்ட ஒரு வங்கி இரண்டாயிரம் ரூபாய் கடன் கொடுத்ததில் - இந்த மில்க் பாரை வைத்து நாட்களை நகர்த்த ஆரம்பித்திருந்தான்.

கடையை மூடிவிட்டு - சாவிக் கொத்தைச் சுழற்றியபடியே தெருவில் நடந்து வந்தவன் - வீட்டு வாசற்படியில் உட்கார்ந்திருந்த நந்திதாவைப் பார்த்ததும் நின்றான்.

"என்னக்கா இன்னும் வாசற்படியிலேயே உட்கார்ந்திட்டிருக்கீங்க?" சுகுமாரை விட இரண்டு வயது மூத்தவளான நந்திதா சுகுமாரைப் பார்த்ததும் புன்னகைத்தாள். அந்தப் புன்னகையில் சோகம் அடர்த்தியாய் ஒட்டியிருந்தது.

"நான் எதுக்காக காத்திட்டிருப்பேன்னு உனக்குத் தெரியாதா சுகுமார். அவர் இன்னும் வீட்டுக்குத் திரும்பலை. எந்த பார்ல குடிச்சுட்டு எப்படி விழுந்து கிடக்காரோ தெரியலை."

"ஏன்க்கா, அண்ணன் குடிக்கிறதை நிறுத்தவேமாட்டாரா...? நீங்க பேசாம அம்மா வீட்டுக்குப் போய் ஒரு மாசம் இருந்துட்டு வாங்க. அண்ணன் அப்பவாவது திருந்துவாரான்னு பார்க்கலாம்."

நந்திதா சிரித்தாள்.

"ஏன்க்கா சிரிக்கிறீங்க?"

"நான் ஒரு மாசம் அம்மா வீட்டுக்குப் போயிட்டேன்னா... அவர்க்கு இப்ப இருக்கிற இந்தக் குடிப் பழக்கத்தோட



இன்னொரு பழக்கமும் வந்து ஒட்டிக்கும். நான் அம்மா வீட்டிலிருந்து வர்றதுக்குள்ளே வேற எவளாவது வீட்டுக்காரியா இந்த வீட்ல உட்கார்ந்திட்டிருப்பா... குடிப் பழக்கத்தையாவது நிறுத்திடலாம். அவளை விரட்ட முடியுமா என்ன...?"

சுகுமார் சிரித்தான்.

"நீங்க ரொம்பவும் பாவம்க்கா..."

"சரி சரி, என்னைப்பத்தி விடு. உன்னோட வியாபாரம் எப்படி நடக்குது? பேங்க்லிருந்து வாங்கின கடனைக் கட்ட முடியுதா?"

"ஏதோ கட்டிட்டிருக்கேன். இந்த மில்க் சொஸைட்டிகாரங்க வாரம் பத்துநாள் கடன் கொடுத்தா எனக்குக் கொஞ்சம் வசதியா இருக்கும்... காலையில் அஞ்சு மணிக்கு பால்கேனைக் கொண்டு வந்து வெச்சிட்டு - ரெண்டு மணி நேரம் கழிச்சு வந்து - பணம் கேக்கிறாங்க... எப்படிக் குடுக்க முடியும்?"

"மில்க் சொஸைட்டி டைரக்டர்கிட்டே சொல்லிப் பார்க்கிறதுதானே?"

"சொல்லிப் பார்த்தேன்."

"என்ன சொல்றார்?"

"ரெண்டு மணி நேரம் டயம் கொடுக்கிறதே பெரிய காரியமாம்... பால்கேனை வெச்சா கேஷ் வாங்கணும்கிறது மில்க் சொஸைட்டியோட விதியாம்..."

MithraVintha

"என்ன விதியோ? பணம் இருக்கிறவன் போனா அந்த விதியெல்லாம் மாறிடும். சரி, நீ கிளம்பு சுகுமார்... பசியோட இருப்பே..."

"நிஜமாவே அகரப் பசிதான்... நாயர் எனக்காகச் சாப்பாட்டை எடுத்து வெச்சுகிட்டு காத்திட்டிருப்பார். வர்றேன்க்கா..."

சுகுமார் நந்திதாவிடம் விடைபெற்றுக் கொண்டு நடையைப் பெயர்த்தான். அவன் நடந்து தெருவின் மறுகோடியில் மறையும் வரைக்கும் பார்த்துக் கொண்டிருந்த நந்திதாவின் காதுகளில் ஆட்டோ வரும் இரைச்சல் விழுந்தது.

திரும்பி - தெருவின் இந்தக் கோடியைப் பார்த்தாள்.

ஆட்டோ ஒன்று ஹெட்லைட் வெளிச்சத்தோடு தத்தித் தத்தி வந்துகொண்டிருந்தது. நந்திதா வாசற்படியை விட்டு எழுந்து நின்றாள்.

தெருவின் குழிகளைத் தவிர்த்து விட்டு வெகு ஜாக்கிரதையாய் ஊர்ந்து வந்த ஆட்டோ இவள் வீட்டு வாசற்படிக்கு வந்ததும் நின்றது.

ஆட்டோவின் உள்ளே பார்வையைப் போட்டாள் நந்திதா. அவளுடைய கணவன் ஞானேஷ் ஏராளமான போதையில் - ஒரு பக்கமாய்த் தலை சாய்த்து உட்கார்ந்திருக்க - அருகே அவனுடைய நண்பன் முகுந்தன் தெரிந்தான். வாசலில் நின்றிருந்த நந்திதாவைப் பார்த்ததும் சொன்னான்.

"கொஞ்சம் வந்து ஒரு கை பிடிக்கறீங்களா? ஞானேஷ் இன்னிக்கு ரொம்பவும் ஓவர். அவனாலே தன்னிச்சையா



எந்திரிச்சி நடந்து வர முடியாது நீங்க ஒரு பக்கம், நான் ஒரு பக்கம் தோளைப் பிடிச்சாத்தான் முடியும்."

நந்திதா ஆட்டோ அருகே ஓடி வந்தாள். கணவன் ஞானேஷின் வலது பக்கத் தோள்ப் பட்டையைப் பற்றிக் கொண்டு கண்களில் நீர் முட்டினாள்.

"என்னங்க...?"

கடைவாயில் ஜொள்ளும், வாந்தியும் ஒழுக- கண்களைச் சிரமமாய்ப் பிரித்துப் பார்த்தான் ஞானேஷ். "ஏய் முகுந்தா... வீடு வந்தாச்சா?"

"ம்...ம்... வந்தாச்சு... எறங்கு... எறங்கு..." முகுந்தன் அவனை ஆட்டோவினின்றும் அள்ளி மூட்டையை இறக்குற மாதிரி எறக்கி, தன் மேல் சாய்த்துக் கொள்ள - நந்திதா ஒரு பக்கமாய் அவனைப் பிடித்துக் கொண்டு - வீட்டுக்குள் போனாள்.

வீடு பூராவும் செமத்தியாய் விஸ்கி நாற்றம். இருவருமாய்ச் சிரமப்பட்டு சோபா - கம் - பெட்டில் ஞானேஷைப்படுக்க வைத்தார்கள். அவனுடைய தலையைப் பற்றி ஒழுங்காகப் படுக்க வைத்துக் கொண்டிருந்த நந்திதா - ஏதோ ஒரு உணர்வு தாக்க, சட்டென்று தலையை உயர்த்தினாள்.

எதிரே நின்றிருந்த முகுந்தன் - அவளையே பார்த்தபடி தெரிந்தான். அவனுடைய பார்வை - நழுவியிருந்த தன் சேலைத் தலைப்புக்குள் விழுந்திருப்பதை உணர்ந்து - அவசர அவசரமாய்த் தன்னைச் சரிப்படுத்திக் கொண்டாள்.

"அம்மா..."

MithraVintha

வாசலில் ஆட்டோ டிரைவர் கூப்பிட்டார்.

முகுந்தன் நந்திதாவை ஏறிட்டபடி சொன்னான். "சிஸ்டர்... மீட்டர் பார்த்து ஆட்டோவை அனுப்பிச்சிட்டு வாங்க. என்கிட்டே சில்லறை இல்லை."

நந்திதா பீரோவைத் திறந்து - பணத்தை எடுத்துக்கொண்டு தெரு வாசலுக்குப் போனாள். ஆட்டோ டிரைவரை ஏறிட்டாள்.

"ஆட்டோவுக்கு எவ்வளவாச்சு?"

"பதினேழு ருபாயம்மா."

"பதினேழா? எங்கிருந்து சவாரி வர்றே...?"

"அண்ணா நகர் ஈஸ்ட்லிருந்து வர்றேம்மா. எனக்கு திரும்பிப் போக சவாரி கிடைக்காதுன்னு தெரிஞ்சும் வர்றேன். ஹோட்டல் வாசல்ல நினைவில்லாமே கிடந்த அவரைப் பார்த்ததும் விட்டுப் போக மனமில்லாமே சவாரி வந்தேன். பின்னாடி சீட்டு பூராவும் வாந்தி பண்ணி வெச்சிருக்கார். அதைக் கழுவிச் சுத்தம் பண்ண ஒரு மணி நேரமாயிடும்மா."

ஆட்டோ டிரைவருக்கு இருபது ருபாய் நோட்டைக் கொடுத்துவிட்டு உள்ளே வந்தாள் நந்திதா. முகத்தில் கோபம் பொரிந்தது. முகுந்தனை உஷ்ணமாய் முறைத்தாள்.

"அவரை எங்கே கூட்டிட்டுப் போனீங்க...?"

"நான் கூட்டிப் போகலை, சிஸ்டர்... ஞானேஷ்தான் என்னைக் கூட்டிட்டுப் போனான்."

"அவர் கூப்பிட்டா நீங்களும் போயிடறதா... புத்தி சொல்ல வேண்டாம்...?"



"சொல்லிச் சொல்லி அலுத்துப் போயிட்டேன்... சிஸ்டர். நான்கூடப் போகலைன்னா இவன் மட்டும் போய் - எந்தப் பார்லாவது உட்கார்ந்து குடிச்சுட்டு எங்கேயாவது விழுந்து கிடப்பான். அதான் நான் கூடப் போய்...! நீங்க ஒன்னும் கவலைப்படாதீங்க சிஸ்டர். நான் ஞானேஷுக்குப் புத்தி சொல்லித் திருத்தறேன்..."

நந்திதாவுக்கு முகுந்தனைப் பார்க்கப் பார்க்க வயிற்றுக்குள் எரிந்தது.

'இவனும் இவனோட மூஞ்சியும்... என்னைப் பார்க்கிற பார்வையே சரியில்லை. இடுப்பையும் மாரையும் அப்படியா ஒருத்தன் லச்சையில்லாமே மொறைச்சுப் பார்ப்பான்...?'

"சிஸ்டர்! கொஞ்சம் வெந்நீர் கொண்டு வாங்க. ஞானேஷை சுத்தம் பண்ணிட்டுப் போறேன்..."- முகுந்தன் சொல்லவும் பதில் பேச முடியாமல் சமையலறையை நோக்கிப் போனாள், நந்திதா.

கேஸ் அடுப்பைப் பற்ற வைத்து - தண்ணீர் நிரம்பிய பாத்திரத்தை அதன் மேல் வைத்தாள். பாத்திரத்தை மூடி வைக்க - ஒரு தட்டை எடுக்கத் திரும்பியவள், சமையலறை வாசலில் முகுந்தன் நின்றிருப்பதைப் பார்த்ததும் முகம்மாறிப் போனாள்.

"என்ன வேணும்?"

"தப்பா நினைச்சுக்கக் கூடாது, சிஸ்டர். எனக்குச் சரியான தலைவலி. சூடா ஏலக்காய் போட்டு ஒரு டம்ளர் டீ கிடைக்குமா?"

Mithra Vintha PUBLIC LIBRARY

''போய் உட்காருங்க. கொண்டு வர்றேன்...'' முறைப்பாய்ச் சொல்லிவிட்டுத் திரும்பிக் கொண்டாள் நந்திதா. ஆனால் முகுந்தன் உள்ளே போகாமல் அவளை நோக்கி வந்தான்.

''சிஸ்டர்... உங்களுக்கு எம் மேலே கோபம் இருக்கலாம். நான்தான் உங்க கணவனை வலுக்கட்டாயமா கூட்டிட்டுப் போய் - குடிக்க வெக்கிறதா நீங்க நினைக்கலாம். ஆனா உண்மை அதில்லை... அஞ்சு மணிக்கு ஆபீஸ் முடிஞ்சதுமே ஞானேஷ் என்னோட டேபிளுக்குத்தான் வருவான். நான் வர மாட்டேன்னு சொல்லி தட்டிக் கழிச்சாலும் கேக்க மாட்டான்... கட்டாயப்படுத்தி கூட்டிகிட்டுப் போயிடுவான்...''

''அதைத்தான் அப்பவே சொல்லிட்டீங்களே... நீங்க போய் ஹால்ல உட்காருங்க. வெந்நீரும் டீயும் கொண்டு வர்றேன்...''

''இருக்கட்டும் சிஸ்டர்... உங்ககூட நான் கொஞ்ச நேரம் பேசிட்டிருக்கேன்...'' சொல்லிக்கொண்டே பக்கவாட்டில் நின்றிருந்த நந்திதாவின் இடுப்பு மடிப்பை ஒரு வித ரசனை யோடு பார்த்தான் முகுந்தன்.

நந்திதா அவனைப் பொருட்படுத்தாமல்- வென்னீர் பாத்திரத்தைக் கீழே எடுத்து வைத்துவிட்டு - பால் பாத்திரத்தை அடுப்பின் மேல் ஏற்றினாள்.

''சிஸ்டர்...''

முகுந்தன் இன்னமும் அவளை வெகுவாக நெருங்கி யிருந்தான்.

''என்ன...?'' உஷ்ணமாய் அவனைப் பார்த்தாள்.



''என்னோட ஒய்ப் கிராமத்துல ஏதோ திருவிழான்னு போனவ இன்னும் திரும்பலே. இன்னும் எப்படியும் நாலைஞ்சு நாளாயிடும்ன்னு நினைக்கிறேன்...''

''சரி...''

''அவ கிராமத்துக்குப் போனதிலிருந்து... எனக்கு ஹோட்டல் சாப்பாடுதான். ஒரு நாள் ரெண்டு நாள்ன்னா பரவாயில்லை பத்துப் பதினஞ்சு நாள் ஹோட்டல் சாப்பாடு சாப்பிட முடியுமா சிஸ்டர்! உடம்பே கெட்டுப் போச்சு... வீட்டுச் சாப்பாடு சாப்பிடணும்னு நாக்கு பரபரக்குது. சிஸ்டர் 'சரி'ன்னு சொன்னா நான் நாளைக்கு வந்துடறேன்... நீங்க என்ன சொல்றீங்க சிஸ்டர்...? நான் வரட்டுமா...?'' முகம் பூராவும் புன்னகையை நிரப்பிக் கொண்டு - தலையை ஒரு மாதிரியாய்ச் சாய்த்துக் கண்ணடித்தான் முகுந்தன்.

ரத்தம் 'குபுகுபு' வென்று சூடாய்த் தலைக்கேற - கண்கள் சிடுங்கி அவனை முறைத்தாள் நந்திதா. கோபமான சுவாசத்தில் மார்புகள் ஏற்றம் இறைத்தது.

''என்ன சிஸ்டர் முறைக்கறீங்க...?''

''மொதல்ல... வெளியே போடா...''

''சிஸ்டர்...''

''சிஸ்டர் சிஸ்டர்ன்னு கூப்பிட்டுகிட்டு என்னைப் பெண்டாளலாம்ன்னு பார்க்கறியாடா ராஸ்கல். உன்னோட ரெட்டை அர்த்தப் பேச்சு எனக்குத் தெரியாதுன்னு நினைச்சியா...? உம் பெண்டாட்டி ஊருக்குப் போயிட்டா அவ வர்ற வரைக்கும் அடுத்தவனோட பெண்டாட்டியை ஊறுகாய்

MithraVintha

மாதிரி தொட்டுக்கலாம்னு இருந்தியா...? மூலையில சாத்தி வெச்சிருக்கிற புது விளக்குமாறு பிஞ்சு போயிடும்....."

"ச்...சி...சிஸ்டர்... நான் சொல்றதை நீங்க தப்பா புரிஞ்சுகிட்டீங்க போலிருக்கு." முகுந்தன் வியர்த்துப் போன முகத்தோடு சொன்னான்.

"நான் உன்னைச் சரியாத்தான் புரிஞ்சு வெச்சிருக்கேன்டா. நீ அவரைக் கூட்டிட்டு வர்ற ஒவ்வொரு தடவையும் உன்னோட மோகரக் கட்டையே சரியில்லே. உன்னோட பார்வையில நரகலோட அசிங்கம் தெரியுது..."

"சர்த்தான் நிறுத்தடி..." முகுந்தன் திடீரென்று தலையைக் கோதிக்கொண்டு சிலிர்த்தான்.

"என்னடா சொல்றே...?"

"இப்பேர்ப்பட்ட குடிகாரப் புருஷன் கிடைச்சே உனக்கு இவ்வளவு திமிர் இருக்கே! இனி தினமும் ஆபீஸிலிருந்து வரும்போது "ஒரு முழம் பூ" வாங்கிட்டு வர்ற புருஷன் கிடைச்சிருந்தா நீ எவ்வளவு திமிராபேசுவே? ஏதோ உதவி பண்ண வந்தா பெரிசா அலட்டிக்கிறியே! எனக்குத் தெரியும், உம் புருஷன் உன்னைத் தொட்டு மாசக் கணக்காச்சு. அதனாலே..."

"அதனாலே இவ காய்ஞ்சு போயிருப்பா, உரசிப் பாக்கலாம்ன்னு வர்றியா...? அவர் குடிகாரரா இருக்கலாம். அதுக்காக நான் விபச்சாரியா மாற முடியுமா? நான் ஏதாவது மோசமா உன்னைப் பேசறதுக்குள்ளே வெளியே போயிடு. இல்லேன்னா மரியாதை கெட்டுப் போயிடும்..."



முகுந்தன் உறுமினான். "நீ இன்னிக்கு பத்தினியாட்டம் பேசறே! ஆனா என்னிக்குமே நீ பத்தினியா இருக்க முடியாது... இன்னும் ஏழே நாள்... எண்ணி ஏழே நாள்... உன் சம்மதத்தோட நான் உன்னைத் தொடப்போறேன்..."

"அப்படி.... நீ தொடறதா யிருந்தா எம் பொணத்தைத் தான்டா தொடுவே. நான் எதையாவது கரைக்கக்கூடாததைக் கரைச்சுத் தலையில ஊத்தறதுக்குள்ளே மரியாதையா வெளியே போயிடு... இல்லேன்னா பக்கத்து வீட்டு ஆசாமிகளைக் கூப்பிட்டு விட்டா தர்ம அடி வாங்கியே செத்துப் போயிடுவே..."

முகுந்தன் அவளை முறைத்துப் பார்த்துவிட்டு- வேகமாய் வாசலை நோக்கிப் போனான். நந்திதா அவன் முதுகைப் பார்வையாலேயே எரித்தாள்.



2

மறுநாள் காலை ஆறு மணி.

கம்பிகள் போட்ட ஜன்னலுக்குப் பின்னால் சூரியன் ரோஜா நிறத்தில் தெரிய - போர்வையை விலக்கிக் கொண்டு மெதுவாய் எழுந்து உட்கார்ந்தான் ஞானேஷ். நேற்றைக்கு ராத்திரி வயிற்றுக்குள் போன விஸ்கி - சகல நரம்புகளிலும் ஏறிக்கொண்டு - அவஸ்தை செய்தது. தலையின் பின்பாகம் ஒரு கல் மாதிரி கனமாய் இருந்தது. கண்கள் இரண்டும் மிளகாய் தீற்றி விட்ட மாதிரி எரிந்தது. தொண்டையைத் திறந்தபோது குரல் கரகரப்பாய் வந்தது.

Mithra Vintha

''நந்து...''

''...''

''நந்து...''

நந்திதா அந்நேரத்துக்கே குளித்து - தலைக்குச் சுற்றின துண்டோடு சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள். எதும் பேசாமல் கணவனை மௌனமாய் நெருங்கினாள்.

''என்ன நந்து... இந்நேரத்துக்கே குளிச்சுட்டியா...?''

''...ம்...ம்...''

''பால் வாங்கி வந்துட்டியா...?''

''...ம்..''

''சூடா காப்பி வேணும்...''

''...ம்...''

''என்ன நந்து... எல்லாத்துக்கும் ம்'' ன்னு சொல்லிட்டிருக்கே...? எம் மேலே ஏதாவது கோபமா...?''

நந்திதா - பேசாமல் சமையலறைக்குப் போகத்திரும்பினாள்.

என்ன நந்து... ஒன்னும் பேசாம போறே...? எனக்குத் தெரியும். எம் மேலே உனக்குக் கோபம்தானே...! ஸாரி... ராத்திரி வீட்டுக்கு வர்றதுக்குக் கொஞ்சம் நேரமாயிடுச்சு...''

நந்திதா முறைத்தாள்.

''ராத்திரி எத்தனை மணிக்கு வந்தீங்கன்னாவது உங்களுக்கு ஞாபகமிருக்கா? அந்த நேரத்துல உங்களுக்கு விஸ்கியைத் தவிர, எந்த ஞாபகமும் இருந்திருக்காதே...''



ஞானேஷ் சிரித்தான்.

''ராத்திரி முகுந்தனுக்கு ரொம்பவும் தொந்தரவு குடுத்துட்டேன் போலிருக்கு.''

நந்திதா குறுக்கிட்டுச் சொன்னாள்.

''அந்த முகுந்தன்தான் எனக்கு ரொம்பவும் தொந்தரவு கொடுத்துட்டான்...''

ஞானேஷ் முகம் மாறினான்.

''நீ என்ன சொல்ற நந்து...?''

''உங்க ப்ரெண்ட் முகுந்தனோட பெண்டாட்டி... அவ ஊருக்குப் போயிருக்காளா?''

''ஆமா...''

''அதான் நீங்க போதையில தன்னை மறந்து கிடக்கறப்போ... நீ கட்டிலுக்கு வர்றியான்னு கூப்பிட்டானா?''

ஞானேஷ் விருட்டென்று எழுந்து நின்றான். முகத்தில் கோபம் தத்தளித்தது. சிவப்பேறியிருந்த கண்கள் அடர்த்தியான சிவப்புக்குப் போயிற்று.

''ராஸ்கல்...!''

''அட உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருதுங்க... எந்த ஆம்பிளையுமே போதையில அப்படிக் கிடக்கிற போது - கூட வர்ற ஆம்பிளைக்கு வீட்ல தனியா இருக்கிற பொண்ணைப் பார்த்தா சபலம் தட்டத்தான் செய்யும். தப்பை நம்ம மேலே வெச்சுகிட்டு - இன்னொருத்தர் மேலே கோபப்படலாமா...?''

MithraVintha

"இன்னைக்கு ஆபீஸ்ல அவனைப் பார்த்து என்னான்னு கேக்கறேன்...! அயோக்கிய ராஸ்கல்...!"

"அவனைப் பார்த்து இந்த விஷயமா ஆபீஸ்ல கேட்டா உங்களுக்கும் எனக்கும்தாங்க அவமானம்...! இனிமே இது மாதிரியான சம்பவங்க நடக்காமே இருக்கணும்ன்னா நீங்க ஒரு காரியம் செய்யணும்..."

"என்ன செய்யணும் நந்து?"

"இனிமே நீங்க குடிக்கக் கூடாது..."

"சரி..."

"நீங்க இப்போ சரின்னு சொல்லுவீங்க... ஆனா சாயந்தரமானா குடிக்கப் போயிடுவீங்க... ராத்திரி பதினோரு மணிக்கு மேலே யார் தோளையாவது புடிச்சுக்கிட்டுத் தள்ளாடிட்டு வருவீங்க..."

"இனிமே மாட்டேன்..."

"நம்பலாமா...?"

"நீ... கும்புடற முருகன் மேலே சத்தியமா..."

நந்திதாவிற்கு மனசில் ஒரு நம்பிக்கை பசேலென்று பிறந்தது.



3

ஆதித்யா அண்ட் கம்பெனி.

சுவர்க் கடிகாரத்தில் மணி ஒன்பதாகியிருக்க - ஆத்திரமும் அவசரமுமாய்த் தன் சீட்டுக்குப் போய் உட்கார்ந்தான் ஞானேஷ். ஆபீஸ் -



ஆட்கள் வராமல் வெறிச்சோடிப் போயிருக்க - டைப்பிஸ்ட் ரேவதி மட்டும் தன் சீட்டில் உட்கார்ந்தபடி முக்கியமான இன்வாய்ஸ்களை டைப் பண்ணிக் கொண்டிருந்தாள். ஞானேஷைப் பார்த்ததும் ஆச்சர்யமாய்க் கேட்டாள்.

"என்ன ஸார்... இவ்வளவு சீக்கிரத்துல இன்னிக்கு வந்துட்டீங்க...?"

அவள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் - சுற்றும் முற்றும் பார்த்தான் ஞானேஷ்.

"என்ன ஸார்... பார்க்கிறீங்க...?"

"முகுந்தன் வந்துட்டாரா...?"

"வர்ற நேரந்தான் ஸார்..."

ஞானேஷ் பொறுமையில்லாமல் சீட்டில் உட்கார்ந்தான். இருதயப் பிரதேசம் பூராவும் சின்னச் சின்ன எரிமலைகள் பொங்கின. 'ராஸ்கல், வரட்டும்!'

சரியாய் ஒன்பதே கால் மணிக்கு முகுந்தன் வந்தான். தூரத்தில் வரும்போதே சீட்டில் உட்கார்ந்திருந்த ஞானேஷுக்கு "குட் மார்னிங்" சொன்னான். பதிலுக்கு ஞானேஷ் "குட் மார்னிங்" சொல்லாமல் அவனையே உக்கிரமாய்ப் பார்த்தான்.

"என்னடா பார்க்கிறே?"

"உன்கூட கொஞ்சம் பேசணும்..."

"பேசேன்..."

"இங்கே வேண்டாம்... வா, லாவட்ரிக்குப் போயிடலாம்... ஆபீஸுக்கு ஒவ்வொருத்தரா வர்ற நேரம்..." ஞானேஷ்

MithraVintha

சொல்லிக் கொண்டே எழுந்து - லாவட்ரியை நோக்கிப் போக - முகுந்தன் இதயம் உதறிக்கொள்ள நெற்றி வியர்த்து அவனைப் பின் தொடர்ந்தான்.

இருவரும் லாவட்ரிக்குள் நுழைந்ததும் - ஞானேஷ் கதவைச் சாத்திக் கொண்டான். சுவர்க்கு முதுகை முட்டுக் கொடுத்தபடி சாய்ந்து நின்றான்.

"என்னடா ஞானேஷ்?"

"நேத்தைக்கு ராத்திரி நான் ரொம்பவும் ஓவரா...?"

"அதையேன் கேக்கறே... நீ நிதானத்திலேயே இல்லை...!"

"நான் நிதானத்துல இல்லேன்னு எனக்குப் புரிஞ்சுதுமே... நீயும் நிதானமில்லாமே நடந்துகிட்டே போலிருக்கு..."

"என்னடா சொல்றே?"

"என்னோட ஒய்ப் நந்திதா எல்லாத்தையும் சொல்லிட்டான்னு சொல்ல வர்றேன்."

"எ...எ... என்ன சொன்னா...?"

"நான் எத்தினி தடவை உன் வீட்டுக்கு வந்திருப்பேன்... சொல்லு, பார்க்கலாம்."

ஞானேஷ் ஒரு கேலிப் புன்னகையோடு மெல்லிய குரலில் முகுந்தனிடம் கேட்டான்.

"நி...நி... நிறைய தடவை வந்திருக்கே..."

"நான் என்னைக்காவது உன்னோட ஒய்ப்கிட்டே தப்பா பேசியிருக்கேனா...?"



"இ...இ...இல்லே..."

"அப்போ நீ மட்டும் நந்திதாகிட்டே ஏன் அப்படிப் பேசணும்...? சிஸ்டர் சிஸ்டர்ன்னு கூப்பிட்டுக்கிட்டே சில்மிஷ வேலை பண்றியாமே...?"

"உன் பெண்டாட்டி பொய் சொல்றா..."

"அவளைப் பற்றி எனக்குத் தெரியும்... அவ பொய் சொல்லமாட்டா... உன்னைப்பத்தி எனக்குத் தெரியும்... தூணுக்குப் புடவை சுத்தியிருந்தாலே அந்தத் தூணைத் தடவிப் பார்க்கிற ஆசாமி நீ! உன்னோட ரஸ்புடின் விளையாட்டையெல்லாம் வேற எந்தப் பக்கமாவது வச்சுக்க... என் வீட்ல வேண்டாம்..."

முகுந்தன் அசட்டுச் சிரிப்போடு சொன்னான்... "நான் ஏதோ பேசப் போக சிஸ்டர் தப்பா நினைச்சுடுச்சு போலிருக்கு..."

"இந்தக் குள்ள நரிப் பேச்செல்லாம் என்கிட்டே வேண்டாம்..."

சொல்லிவிட்டு லாவட்ரி கதவைத் திறந்து கொண்டு - விருட்டென்று வெளியே வந்தான் ஞானேஷ். செத்துப்போன முகத்தோடு அவனைப் பின் தொடர்ந்தான் முகுந்தன். தன்னுடைய இருக்கைக்கு வந்து உட்கார்ந்து - எரிச்சலோடு பைல்களைப் புரட்டிவேலையைப் பார்க்க ஆரம்பித்த விநாடி-

ப்யூன் கனகசாமி முன்னால் வந்து நின்றான்.

"என்ன...?"

"உங்களை எம்.டி. கூப்பிடறார் ஸார்..."

MithraVintha

"என்னையா...?" ஆச்சர்யமாய் எழுந்தான் ஞானேஷ்.

"ஆமா ஸார்..."

"என்ன விஷயம் கனகசாமி...?"

"தெரியலை ஸார்..."

ஞானேஷ் எழுந்து மானேஜிங் டைரக்டர் ராம்குமார் அறையை நோக்கிப் போனான். வேலைக்குச் சேர்ந்த இந்த ஐந்து வருஷ காலத்தில் - எம்.டி.யை ஏழெட்டுத் தடவைதான் சந்தித்துப் பேசியிருப்பான் ஞானேஷ். கடைசியாகச் சந்தித்தது ஆறு மாதத்திற்கு முன்னால்...!

இப்போது எதற்காகக் கூப்பிடுகிறார்?

அறையை நெருங்கி-கதவை மெல்லத் தட்டினான்.

'டொக்...டொக்...'

"எஸ்...கம்...இன்..."

ஞானேஷ் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனான்.

"குட் மார்னிங் ஸார்..."

"குட் மார்னிங்... மிஸ்டர் ஞானேஷ்... உட்கார்ங்க..."

கண்ணாடி மேஜையில் பேப்பர் வெயிட்டை உருட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த ராம்குமார், முப்பத்தைந்து வயது உடம்பில் இருந்தான். தலையின் முன்புறம் முடிகொட்டிப் போய் - சொற்ப முடிகளுக்கு நடுவே வழுக்கை பாளம் பாளமாய்த் தெரிந்தது. சதைப்பிடிப்பான முகத்தில் மூக்கு மட்டும் ஜப்பானியத்தனமாய் இருந்தது. கண்களில் வெளிர்ப் பச்சை நிறக் குளிர் கண்ணாடி. உடம்பில் க்ரே நிற சபாரி.



"என்ன மிஸ்டர் ஞானேஷ், அந்த கேஷ் ப்ளோ ஸ்டேட்மெண்ட்டை பிரிப்பேர் பண்ணிட்டீங்களா..?"

"பண்ணிட்டிருக்கேன் ஸார்!"

"போன வாரமே கேட்டப்போ ரெண்டு நாள்ள தர்றதா சொன்னீங்க?"

"ஸாரி ஸார். மே மன்த்தும் ஆகஸ்ட்டும் ஸ்டேட்மெண்ட்ல டேலி ஆகலை. ஏ.ஓ. கிட்டே ஒரு வார்த்தை கேட்டுட்டு.."

ராம்குமார் பேப்பர் வெயிட்டைச் சுழற்றுவதை நிறுத்தினான். குளிர் கண்ணாடியைக் கழற்றி மேஜையின் மேல் போட்டு விட்டு நிமிர்ந்தான். "ஏ.ஓ.வை. எதுக்காகக் கேக்கணும்? இருக்கிற டீடெய்ல்ஸ்ஸை வெச்சிக்கிட்டு ஸ்டேட்மெண்டை நீங்கள் பிரிப்பேர் பண்ணிட வேண்டியது தானே. வர வர நீங்க சரியில்லை ஞானேஷ்... உங்களைப் பற்றி நான் கேள்விப்படுகிற நியூஸ் எனக்குச் சந்தோஷமாகவே இல்லை."

"ஸ...ஸார்.."

"நேத்தைக்கு அண்ணா நகர் ஈஸ்ட் வந்திருந்தீங்களா?"

ஞானேஷ் மௌனம் சாதித்தான்.

"ம்... சொல்லுங்க, ஞானேஷ்... வந்திருந்தீங்களா? இல்லையா..?"

"வந்திருந்தேன் ஸார்.."

"எதுக்கா வந்தீங்க?"

"ஒரு ப்ரண்ட் பார்க்கணும்னு.."

MithraVintha

"பொய் சொல்லாதீங்க ஞானேஷ்... அண்ணா நகர் ஈஸ்ட்ல இருக்கிற சில்வர் கேட்ஸ் பார்க்கு வந்து கண் மண் தெரியாமே குடிச்சிட்டு - நிதானமில்லாமல் ரோட்டோரமா ஒரு பிச்சைக்காரன் மாதிரி விழுந்து கிடந்தீங்க. அந்த வழியா வந்த ஆபீஸ்... ஸ்டாப் முகுந்தன் உங்களைப் பார்த்துட்டு - ஆட்டோவிலே போட்டு வீடு கொண்டு வந்து சேர்த்தாரு. உண்டா.. இல்லையா...?"

"எ..எஸ்...ஸார்..."

"இந்தக் கம்பெனியோட பாரம்பரியம் என்னான்னு உங்களுக்குத் தெரியுமா ஞானேஷ்? இந்த கம்பெனியோட பவுண்டர் ஐ மீன் என்னோட ஃபாதர் 'ராஜா சர்' பட்டம் வாங்கினவர். இந்த கம்பெனியை ஒரு கோயில் மாதிரி அவர் நிர்வாகம் பண்ணினார். இங்கே வேலை பார்க்கிற ஸ்டாப் எல்லாருமே ஒழுக்கத்தை உயர்வா நினைக்கிறவங்க மாதிரி இருக்கணும்னு சொல்லுவார். ஆதித்யா கம்பெனியிலே வேலை பார்க்கிற அக்கௌண்டன்ட் ஞானேஷ் குடிச்சிட்டு ரோட்டோரமா விழுந்து கிடந்தார்ன்னு வெளியே சொன்னா எவ்வளவு அசிங்கம். இதனாலே கம்பெனியோட பேரு எவ்வளவு தூரம் பாதிக்கப்படுதுன்னு யோசிச்சுப் பார்த்தீங்களா?"

ஞானேஷ் தயக்கமாய் ராம்குமாரை ஏறிட்டான். "ஸார்! இந்த விஷயத்தை உங்களுக்கு யார் சொன்னாங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"இதையெல்லாம் யாராவது ஒருத்தர் பார்த்துத்தான் சொல்லணும்னு இல்லை, மிஸ்டர் ஞானேஷ். நீங்க ரொம்ப நாளா குடிச்சுட்டு வர்றீங்களா?"



"மன்னிக்கணும் ஸார். நான் ஆபீஸ் வேலை நேரம் முடிஞ்சு... சாயந்தரம் ஆறு மணிக்கு மேல்தான் குடிக்கிறேன்... நானொன்றும் குடிச்சுட்டு ஆபீஸுக்கு வரலையே!"

"நோ.. யூ ஆர் ராங். இந்தக் கம்பெனியில் வேலை பார்க்கிறவங்களுக்கு மொராலிட்டிதான் முக்கியம். உங்களுக்கு இன்னும் ஒரு மணி நேரத்திலே சஸ்பென்ஷன் மெமோ வரும்."

ஞானேஷ் அதிர்ச்சியோடு அவரைப் பார்த்தான்.

"ஸார்..."

"நீங்க சீட்ல போய் உட்கார்ங்க.. மெமோ வரும். கையெழுத்துப் போட்டு வாங்கிட்டு நீங்க வீட்டுக்குப் போகலாம்.."

"ஸார்! யாரோ எதையோ சொல்லி உங்க மனதைக் கெடுத்திருக்காங்க.. நான் குடிச்சுட்டு ரோடெல்லாம் விழுந்து கிடக்கலை ஸார்.. என்கூட வந்த முகுந்தனை வேணுமானா கேட்டுப் பாருங்க ஸார்.."

"ஐ டோண்ட் வாண்ட் யுவர் எக்ஸ்பிளனேஷன்... மெமோவைப் பார்த்துட்டு படிச்சுட்டு முறைப்படி உங்க எக்ஸ்ப்ளனேஷனைக் கொடுங்க.."

"ஸார்... ப்ளீஸ் ஹியர் மீ.."

"யு.. மே... கோ.."

பைலை நகர்த்தி மெமோவை எடுத்துக் கொண்டான் ராம்குமார். பேனா ஸ்டாண்டில் குத்தியிருந்த 'ரெட் லீப்' பேனாவை எடுத்துக் கொண்டு கையெழுத்திட ஆரம்பித்தான்.

MithraVintha

ஞானேஷ் - சில வினாடிகள் அவனையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு - கதவைத் திறந்தபடி வெளியே வந்தான்.

எல்லா இருக்கைகளிலும் ஆட்கள் வந்து உட்கார்ந்து ஆபீஸை நிறைத்திருந்தார்கள். ஞானேஷ் நேராக முகுந்தன் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்தான். ஏதோ இன்வாய்ஸ் களைப் பன்ச்சிங் மெஷினில் துளையிட்டு - பைலில் கோத்துக் கொண்டிருந்த முகுந்தன் நிமிர்ந்தான். ஞானேஷ் கைகளை மேஜையின் மேல் ஊன்றிக் கொண்டு முகுந்தனை விழிகள் தெறிக்கப் பார்த்தான். முகுந்தன் மெல்ல எழுந்து நின்றான்.

"நேற்றைக்கு ராத்திரி நான் குடிச்சதைப் பற்றி நீதான் எம்.டி கிட்டே சொன்னியாடா?"

"இ... இல்லையே..." முகுந்தன் நாக்கு குளறியது.

"நீதான்டா சொல்லியிருக்கணும். அண்ணா நகர் ஈஸ்ட்ல நான் குடிக்கப் போனது உன்னை விட்டா வேறு யார்க்கடா தெரியும்? என் கூட இருந்துகிட்டே குழி தோண்டி யிருக்கியேடா பாவி.. உன்னை.. உன்னை.."

சரேலென்று தாவி - எட்டிச் சட்டையைப் பிடித்தான் ஞானேஷ். அவன் எதிர்பார்க்காத வினாடிகளில் 'ர்ர்ரம் ர்ர்ரம்' மென்று கன்னம் கன்னமாய் அறைந்தான். பைல்கள் கீழே விழ - மைபுட்டி கீழே விழுந்து ஒரு மார்டன் ஆர்ட் மாதிரி 'ப்ளாச்' என்று சிதறியது.

பக்கத்து நாற்காலிகளில் உட்கார்ந்திருந்த டெஸ்பாட்ச் குமரவேல், டைப்பிஸ்ட் தண்டபாணி, க்ளார்க் டானியேல், ஹெட்கிளார்க் ஐராவதம் - எல்லோரும் எழுந்து வருவதற்குள்



ஞானேஷும் முகுந்தனும் தீவிரமாய்க் கைகலக்க ஆரம்பித்து விட்டார்கள். பரஸ்பரம் 'ர்ர்ரம் ர்ர்ரம்' பெற்று அறைகளை விநியோகித்துக் கொண்டு - மேஜைகளின் இடைவெளிகளில் ஆக்ரோஷமாய்ப் புரண்டார்கள்.

இருவரையும் சிரமமாய்ப் பிரித்தெடுத்து - ஆளுக்கொருவராய் அணைகாத்தார்கள். "என்ன ஞானேஷ், கொஞ்சம் கூட டீஸன்ஸி இல்லாமல்?" ஹெட்க்ளார்க் அதட்ட, அதை பொருட்படுத்தாது, ஞானேஷ் பொருமினான்.

"உனக்குச் சமாதி கட்டாமே விட மாட்டேன்டா... எம் பொண்டாட்டிகிட்டே என்னமோ சவால் விட்டியாமே... அதே ஏழு நாள்ல உனக்கு ஒரு முடிவு கட்றேன்டா.."

கத்திக் கொண்டே ஆபீஸை விட்டு வெளியே வந்தான் ஞானேஷ்... அந்தச் சில நிமிஷங்களில் ஆபீஸ் முழுவதும் பரபரத்துப் போனது.



4

"சுகுமார்!"

குரல் கேட்டு - சைக்கிளில் வேகமாக வீட்டைத் தாண்டிக் கொண்டிருந்த சுகுமார் சட்டென்று நின்றான். வீட்டு வாசலில் நந்திதா நின்றாள். காலை பத்தரை மணி வெயில் உற்சாகமாய் இருந்தது.

"என்னக்கா.."

"ரெண்டு ரூபாய்க்குத் தயிர் [illegible]

MithraVintha

"இப்பவே வேணுமாக்கா?"

"ஊ... ஹூம். பன்னிரண்டு மணி சுமார்க்கு குடுத்து விட்டா போதும். வெச்சிருந்த தயிர் கிண்ணத்தில் பூனை வாய் வெச்சிடுச்சு.."

"குடுத்து விடறனேக்கா.... அப்புறம் அண்ணன் ராத்திரி எத்தினி மணிக்கு வந்தாரு?"

"நீ போன கொஞ்ச நேரத்துக்குள்ளே வந்துட்டார்.."

"என்ன ஃபுல் லோடா..?"

"லோடு இல்லாமே அவர் வருவாரா? ஆனா இனிமே குடிக்க மாட்டேன்னு காலையிலே எந்திரிச்சதும் சொன்னார்."

"ராத்திரிக்கு அண்ணன் எப்படி வர்றார்ங்கறதைப் பார்த்திட்டு அப்புறமா சந்தோஷப்படுங்க அக்கா.. குடிக்கிறவங்க பகல்லே பேசற பேச்சை, ஜெயவர்த்தனா பேசற மாதிரி எடுத்துக்கணும். நான் வரட்டுமாக்கா? இன்னிக்கு சொஸைட்டியில் பால் சப்ளை கிடையாதுன்னு சொல்லிட்டான்... எங்கேயாவது மில்க் டைரியிலிருந்து பால் வாங்கத்தான் புறப்பட்டிருக்கேன்.."

"ராத்திரி எட்டரை மணிக்கு வழக்கம் போல் எனக்கு அரை லிட்டர் பால் கிடைக்குமில்லையா?"

"கண்டிப்பா கிடைக்கும்.. நானே வீட்டுக்குக் கொண்டு வந்து வெத்திடறேன்... போதுமா? நான் வரட்டாக்கா... நேரமாச்சு.."

சொல்லிக்கொண்டே சைக்கிளை அழுத்தினான், சுகுமார். சமையல் கட்டிலிருந்து ஏதோ தீயும் வாசம் வர... பதட்டமாய்



உள்ளே ஓடினாள் நந்திதா. வாணலியில் வெந்து கொண்டிருந்த அவரைக்காய்ப் பொரியல் - அடுப்புப் பிடித்துத் தீய்ந்து கொண்டிருக்க - வேக வேகமாய் ஒரு துணியை எடுத்து - வாணலியை இறக்கி வைத்து விட்டு - குக்கரை அடுப்புக்குக் கொடுத்தாள்.

அதே வினாடி -

வீட்டின் நடு அறையில் நாற்காலி நகர்த்தப்பட்ட சத்தம் கேட்க -

ஆச்சர்யமாகி வெளியே வந்தாள்.

ஞானேஷ் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான்.

"என்னங்க, இது... ஆபீஸுக்குப் போகலியா...? மணி பத்தரைதான் ஆகுது. அதுக்குள்ளே திரும்பிட்டீங்களா..?"

ஞானேஷ் மௌனமாய் அவளை ஏறிட்டான். கண்கள் சிவப்பேறிக் கலங்கியிருந்தன. தலை கலைந்திருந்தது. சர்ட் கசங்கிப் போய்த் தெரிந்தது.

"என்னங்க... ஒரு மாதிரியா இருக்கீங்க...?"

அளவாய்ப் பெருமூச்சு விட்டான் ஞானேஷ். "ஆபீஸ்ல எனக்கு சஸ்பென்ஷன் மெமோ குடுத்திருக்காங்க நந்து.."

"சஸ்பென்ஷன் மெமோவா.. எதுக்கு?" நந்திதாவின் விழிகள் அதிர்ச்சியில் விரிந்தன. கணவனை வெகுவாய் நெருங்கி நின்று - அவன் கையைப் பற்றிக் கொண்டாள்.

"நான் குடிச்சிட்டு ரோட்ல கி[illegible]ந்ததை அந்த ராஸ்கல் முகுந்தன் போய் எம்.டி. கிட்டே சொல்லியிருக்கான். அந்த [illegible]

MithraVintha

புருஷன் உடனே எனக்கு மெமோ குடுத்துட்டார். வெளியே வர்றப்ப அந்த ராஸ்கலை நல்லா ரொட்டி தட்டிட்டுதான் வந்தேன். இனியும் அவனை நான் சும்மா விடப் போறதில்லை. ஆபீஸை விட்டு வெளியே வரட்டும். ரெண்டா வகுந்து போட்டுடறேன்.."

"உங்க எம்.டி. கிட்டே அவன்தான் சொன்னான்னு உங்களுக்கெப்படி தெரியும்?"

"அவன்தானே என் கூட வந்தான்.."

நந்திதா சிரித்தாள்.

"என்ன நந்து, சிரிக்கிறே..."

"இந்த மெமோ உங்களுக்கு எப்பவோ கிடைச்சிருக்க வேண்டியது... ரொம்ப லேட். சரி. மெமோவுக்கு என்ன பதில் சொல்லப் போறீங்க.."

"நான் யூனியன் மூலமாயும், லேபர் கோர்ட் மூலமாகவும் ஃபைட் பண்ணப் போறேன். நான் குடிச்சதேயில்லைன்னு ப்ரூப் பண்ணி.. எல்லார் மூஞ்சிலேயும் கரி பூசப் போறேன்..."

"எப்படிங்க?"

"என் ப்ரெண்ட் ஒருத்தன் ஜி.ஹெச்ல டாக்டராயிருக்கான். நானும் அவனும் பி.யு.ஸி. வரைக்கும் ஒன்னா படிச்சோம். நமக்குக் கல்யாணமாறதுக்கு ஒரு வருஷம் முன்னாடி கூட நானும் அவனும் பைக்ல ஊட்டி போய்த் திரும்பினோம்."

"வழியிலே கூட ஏதோ ஆக்ஸிடெண்ட் ஆச்சுன்னு சொன்னீங்களே."



"அதே டாக்டர்தான்.. அவன் கிட்டே எனக்கு குடிப் பழக்கமே இல்லேன்னு ஒரு சர்டிபிகேட் வாங்கி - லேபர் கோர்ட்ல வெச்சு.. வாதாடி அந்த மெமோவைக் கொடுத்தவங்க வாபஸ் வாங்கும்படியா பண்ணப் போறேன்.."

"உங்க டாக்டர் ப்ரெண்ட் சர்டிபிகேட் குடுப்பாரா?"

"குடுப்பான்.. இப்போ அவன் கிட்டதான் போலாம்ன்னு இருக்கேன்.. நீயும் வர்றியா.. இந்நேரம் போனா வீட்ல கொஞ்சம் ப்ரீயா இருப்பான்.. கல்யாணமானவன். அவனோட ஒய்ப்பும் ஒரு டாக்டர்தான்.."

"போகலாம்," என்றாள் நந்திதா.



5

டாக்டர் சந்திரன் லுங்கி கட்டி - ஒய்வாய் நாற்காலியில் உட்கார்ந்து - டி.வி.யில் கிரிக்கெட் மாட்ச் பார்த்துக் கொண்டிருந்த பொழுது - ஆட்டோவினின்றும் போய் இறங்கினார்கள் ஞானேஷும் நந்திதாவும். சந்திரன் கதவைத் திறந்து கொண்டு எட்டிப் பார்த்து மலர்ந்தான். அவசர அவசரமாய்ச் சட்டையை மாட்டிக் கொண்டு - "வாடா ஞானேஷ்..." என்றான். சந்திரனின் மனைவி பத்மா பக்கத்து அறையினின்றும் எட்டிப் பார்த்துப் புன்னகைத்தாள்.

இருவரும் உள்ளே நுழைந்தார்கள்.

"என்னடா இந்த வெய்யில்ல தம்பதி சமேதரா வந்திருக்கே.. என்ன விஷயம்...?" கேட்டுக் கொண்டே நாற்காலிகளை எடுத்துப் போட்டான் சந்திரன். டி.வி.யை அணைத்து விட்டு அவர்களுக்கருகே வந்து உட்கார்ந்தான்.

MithraVintha

ஞானேஷ் விபரத்தைச் சொன்னான். உள்ளங்கையில் மோவாயைத் தாங்கி எல்லாவற்றையும் கேட்ட சந்திரன் - பிறகு நிமிர்ந்தான்.

"நீ குடிக்காத பேர்வழின்னு என் கிட்டயிருந்து உனக்கு சர்டிபிகேட் வேணும்.. அதுதானே.. விஷயம்..?"

"ஆமா.."

"அது ரொம்ப கஷ்டம்.."

"........"

"நீ கேலை லேபர் கோர்ட்டுக்குக் கொண்டு போனா.. சர்டிபிகேட் கொடுத்த நானும் சாட்சி சொல்ல வரணும். நான் குடுத்த சர்டிபிகேட் உண்மையா.. பொய்யான்னு தீர்மானிக்க - ஒரு பொது டாக்டரை வெச்சு மறுபடியும் மெடிக்கல் டெஸ்ட்டுக்கு உட்படுத்திப் பார்ப்பாங்க.. அந்த சமயத்துல நீயும் மாட்டிக்கணும்.. நானும் மாட்டிக்கணும்.."

ஏமாற்றமானான் ஞானேஷ்.

"இது என்னோட கௌரவப் பிரச்சனை, சந்திரன்..!"

"அவ்வளவு கௌரவம் பார்க்கிறவன் ஏன்டா குடிச்சே?"

"தப்புத்தான். பாழாப் போன இந்தக் குடிப்பழக்கத்தை என்னால் நிறுத்த முடியலை. பொழுது சாஞ்சா போதும், உடம்பும் மனமும் அந்தப் போதைக்காகப் பரபரத்துப் பறக்குது.."

"நான் அதுக்கு வேணுமானா ட்ரீட்மெண்ட் தர்றேன். வாரம் பத்து நாள்ல உன்னோட குடிப் பழக்கத்தையே நிறுத்திக் காட்டறேன், போதுமா?"

நந்திதா குறுக்கிட்டுச் சொன்னாள்.



"அந்த உதவியை நீங்க செஞ்சாலே போதும்.. நான் இவர்க்கு எத்தனையோ தடவை சொல்லிப் பார்த்துட்டேன். இன்னிக்கு மானம் மரியாதை போய் 'மெமோ' வாங்கின பின்னாடி இவர்க்குப் புத்தி வந்திருக்கு."

"நாளையிலிருந்து க்ளினிக்குக்கு வந்திடு. ஒரு வாரத்துக்கு செமத்தியான ட்ரீட்மெண்ட். அப்புறம் பார்... விஸ்கின்னு சொன்னாலே வாந்தி எடுக்க ஆரம்பிச்சுடுவே..."

சந்திரனின் மனைவி பத்மா ஆரஞ்சு நிற ரஸனா டம்ளர்களோடு வந்தாள். சந்திரன் நந்திதாவை அவளுக்கு அறிமுகப்படுத்தி வைத்ததும் கலபமாக ஒட்டிக் கொண்டாள்.

"உங்களுக்குக் கல்யாணமாகி எத்தனை வருஷமிருக்கும்?"

"நாலு வருஷம்.."

"நாலு வருஷமா? குழந்தைங்க எத்தனை?"

நந்திதா கசப்பாய்ச் சிரித்தாள். "அந்த பாக்கியம்தான் இதுவரைக்கும் இல்லை."

"ஏன்..?"

"அதுக்கு இன்னும் நேரம் வரலை... உங்களுக்கு எவ்வளவு குழந்தைங்க?"

"ஒரே ஒரு பையன். வயசு அஞ்சு.. ஏற்காடு மாண்ட்போர்ட் ஸ்கூல்ல சேர்த்து விட்டோம்.."

மேலும் ஒரு அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, ஞானேஷும் நந்திதாவும் புறப்பட எழுந்தார்கள். சந்திரன் சொன்னான்.

MithraVintha

''சஸ்பென்ஷன் மெமோ விவகாரத்தைப் பெரிது பண்ணாதே ஞானேஷ்... பேசாம மானேஜிங் டைரக்டர் கிட்டே போய் அபாலஜி கேட்டுக்கோ... நான் உன்னோட குடிப் பழக்கத்தை அறவே நிறுத்திடறேன்..''

''ம்.. ம்..''

''அந்த மெமோ விஷயமா யார்கிட்டேயும் எந்தத் தகராறும் வெச்சுக்காதே..''

''ம்.. ம்..''

''நாளைக்கு ட்ரீட்மெண்டை ஆரம்பிச்சுடுவோம்... க்ளினிக்குக்கு வர்றியா?''

''நாளைக்கு வேண்டாம்..''

''ஏன்?''

''இந்த மெமோ சம்பந்தமா யூனியன் லீடர்ஸைப் பார்க்க மதுரை போறேன்..''

''நீ திருந்த மாட்டேடா. எப்ப கிளம்பற..?''

''இன்னிக்கு ராத்திரியே... போய்ட்டு ரெண்டு நாள் கழிச்சுதான் வருவேன். வந்ததும் ட்ரீட்மெண்ட்டுக்கு வந்துடறேன்..''

''நீ வரலைன்னா நான் உன் வீட்டுக்கு வந்துடுவேன்.'' சந்திரன் சொல்ல, இருவரும் விடை பெற்றுக் கொண்டு வாசற்படி இறங்கி - தெருவில் நடந்தார்கள்.

''என்னங்க... நீங்க நிஜமாவே மதுரை போறீங்களா?''



''ஆமா... நந்து..''

''அந்த மெமோ பிரச்னையை ஏன் பெரிசு பண்றீங்க? டாக்டர் சொன்ன மாதிரி உங்க மானேஜிங் டைரக்டர் கிட்டே மன்னிப்புக் கேட்டுக்கோங்களேன்..''

''மன்னிப்பு மட்டும் கேக்க மாட்டேன்..'' என்று தீர்மானமாய்ச் சொன்னவன் நந்திதா சட்டென்று நின்று விட்டதைப் பார்த்துக் குழப்பமானான்.

''ஏன் நந்து நின்னுட்டே?''

''பேசிக்கிட்டே வந்ததுல செருப்பை மிதிக்காமே டாக்டர் வீட்லேயே விட்டுட்டு வந்துட்டேன். ஒரு நிமிஷம் நில்லுங்க.. நான் போய்ச் செருப்பைத் தொட்டுக்கிட்டு வந்துட்றேன்..'' சொல்லிக் கொண்டே இருபது அடி தள்ளிப் போயிருந்த சந்திரனின் வீட்டை நோக்கிப் போனாள்.

வீட்டை நெருங்கி -

வாசற்படி ஏறினவள் -

உள்ளே யிருந்து வந்த பேச்சுக் குரலைக் கேட்டதும் சட்டென்று நடை தயங்கினாள். பேச்சுக் குரல் காதில் அறைந்தது.

''அப்போ அந்த நந்திதாவுக்குக் குழந்தை பிறக்கவே பிறக்காதா?''

''எப்படிப் பிறக்கும்...? ஊட்டி போய்ட்டு நாலும் அவனும் பைக்ல திரும்பறப்போ நடந்த அந்த ஆக்ஸிடெண்ட். எனக்குக் கால்ல அடி. அவனுக்கு இடுப்புல அடி. ரெண்டு பேரும் ஒரு டாக்டர்கிட்டே தான் ட்ரீட்மெண்ட் எடுத்துகிட்டோம். ஞானேஷ்

MithraVintha

மயக்கத்துல இருந்தபோது டாக்டர் என்கிட்டே தீர்க்கமான குரல்ல சொன்னார். "உங்க ஃப்ரெண்டுக்குக் காயம் சீக்கிரமே குணமாயிடும். ஆனா ஒரு பொண்ணைத் தாயாக்கக் கூடிய சக்தி போயிடுச்சு.. இதை அவர் கிட்டே நீங்க சொல்ல வேண்டாம்.. நானும் சொல்லப் போறதில்லை.. அவருக்காகவே தெரிகிற போது தெரியட்டும்னு சொன்னார்."

"பாவங்க உங்க ப்ரண்ட்.."

"அந்தப் பொண்ணும் பாவம்தான்.."

"வாசல்ல யாரோ வர்றாங்க போலிருக்கு."

சந்திரன் எட்டிப் பார்த்தான்.

"அடடே.. வாங்க."

"செ.. செருப்பு.."

"செருப்பைத் தொட்டுக்க மறந்துட்டீங்களா...? வாங்க... உள்ளே வாங்க.. ஞானேஷ் எங்கே.. வெளியிலே.. நின்னுட்டானா...?"

நந்திதா செருப்பைத் தொட்டுக் கொண்டு - தலையசைத்து விடை பெற்று - அவசர அவசரமாய் வாசற்படி இறங்கி - கணவனை நோக்கிப் போனாள். இருதயம் லேசான துடிப்பில் இருந்தது. 'கடந்த நான்கு வருஷமாய் மாதா மாதம் அந்த 'மூன்று நாளை'த் தொடர்ந்து அனுஷ்டித்து வந்ததின் காரணம் புரிந்தது அவளுக்கு!'

அவர்கள் பேசிக் கொண்டது என் காதில் விழாமலேயே இருந்திருக்கக் கூடாதா? வியர்த்து ஊற்றிய முகத்தை - சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டே கணவனை நெருங்கினாள்.



"போலாமா..?" ஞானேஷ் கேட்டான்.

"ம்.."

"ஆட்டோவில் போலாமா... பஸ்ஸில போலாமா?"

"ஏதோ ஒண்ணு.."

"ஏன் நந்து என்னவோ மாதிரி இருக்கே?"

"ஒரு மாதிரியும் இல்லையே.. அடிக்கிற வெயில்ல தலை 'விண் விண்'ன்னு வலிக்குது."

"அப்போ ஆட்டோ பிடிச்சுடலாமா?"

"ம்.."

"மெயின் ரோட்டுக்குப் போனாத்தான் ஆட்டோ கிடைக்கும். இப்படி நிழல்ல நடந்து போயிடலாம். வா..."

மெல்ல நடந்தார்கள்.

"என்னங்க.."

"ம்.."

"இந்த டாக்டர் எத்தனை வருஷமா உங்களுக்கு பிரெண்ட்?"

"காலேஜ் படிக்கிற நாள்லேர்ந்தே.."

"நீங்களும் அவரும் ஏதோ ஒரு ஊருக்கு பைக்ல போயிட்டு திரும்பும்போது ஆக்ஸிடெண்ட் ஆனதா சொன்னீங்களே... அது எந்த ஊர்ங்க?"

MithraVintha

"ஸ்டீட்டி"

"கல்யாணத்துக்கு முந்தி நடந்ததுதானே..?"

"ஆமா.."

"உங்களுக்கு அடி பலமா?"

"எனக்கு இடுப்புல அடி. ஆனா வாரம் பத்து நாள்ல சரியா போயிடுச்சு. சந்திரனுக்கு கால்ல அடி.. மாசக் கணக்கா.. கட்டு போட்டிருந்தான்.. ஆமா.. திடீரென்று எதுக்காக அந்த ஆக்ஸிடெண்ட்டைப் பத்தி அவ்வளவு அக்கறையா கேக்கறே...?"

"திடீர்னு ஞாபகம் வந்தது. அதான் கேட்டேன்."

மெயின் ரோட்டைத் தொட்டார்கள்.

காலியான ஆட்டோ ஒன்று கலபமாய்க் கிடைத்தது.



6

மறுநாள் காலை பதினோரு மணி.

மானேஜிங் டைரக்டர் ராம்குமாரின் அறைக்குள் நுழைந்தான் ப்யூன் கனகசாமி. ராம்குமார் நிமிர்ந்தான்.

"என்ன..?"

"ஸார்! ஞானேஷ் ஸாரோட ஒய்ப் உங்களைப் பார்க்கிறதுக்கு வந்திருக்கு. வரச் சொல்லட்டுமா?"

ராம்குமாரின் புருவங்கள் உயர்ந்தன. ஃபைலொன்றில் வேகமாய்க் கையெழுத்திட்டு நகர்த்தினபடியே கேட்டான்.



"என்ன விஷயம்ன்னு கேட்டியா?"

"கேட்டேன் ஸார்.. உங்ககிட்டே தனியா பேசணுமாம்... ஒரு பத்து நிமிஷத்தில பேசிட்டுப் போயிடறேன்னு சொல்லுது.."

"சரி, வரச் சொல்லு."

ப்யூன் கனகசாமியின் தலை மறைந்த இரண்டாவது நிமிஷம் - நந்திதா உள்ளே நுழைந்தாள். புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்தியிருந்தாள். மெல்லிய குரலில் வணக்கம் சொன்னாள்.

"வாங்க மிஸஸ் ஞானேஷ்.. உட்காருங்க." ராம்குமார் சொல்ல, அவனுக்கு எதிரேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள் நந்திதா.

"என்ன விஷயம், சொல்லுங்க."

"என்னோட கணவர்க்கு நீங்க கொடுத்த சஸ்பென்ஷன் மெமோ விஷயமா உங்களைப் பார்த்துட்டுப் போக வந்தேன்.."

"அதான் என்ன விஷயம்ன்னு கேட்டேன்.."

"அந்த சஸ்பென்ஷன் மெமோவை நீங்க வாபஸ் வாங்கிக்கணும் ஸார்! இனிமே அவர் குடிக்காதபடி நான் பார்த்துக்கறேன்.."

"ஸாரி, மிஸஸ் ஞானேஷ். உங்க கணவர் அந்த மெமோவுக்குரிய மரியாதையைக் கொடுத்து - ஏதாவது எக்ஸ்பிளனேஷன் கொடுத்திருந்தாலும் - நான் அதை கன்சிடர் பண்ணி மெமோவை வாபஸ் வாங்கியிருப்பேன். ஆனா உங்க கணவர் நேத்தைக்கு ஆபீஸ்ல எவ்வளவு இன்டீஸண்டா

MithraVintha

நடத்துகிட்டார் தெரியுமா? நான் மெமோ கொடுக்கக் காரணமே முகுந்தன்தான்னு அவரை அடிச்சு ஆபீஸ்ல கட்டிப் புரண்டு சண்டை போட்டு நேத்தைக்கு ஆபீஸ்ல ஒரே ரசாபாசமா நடத்துகிட்டார். நான் இந்த விஷயத்தை அடுத்த வாரம் டைரக்டர்ஸ் மீட்டிங்குக்குக் கொண்டு போய் - மிஸ்டர் ஞானேஷை டிஸ்மிஸ் பண்ணலாம்ன்னு இருக்கேன்.."

நந்திதா கையெடுத்துக் கும்பிட்டாள்.

"தயவு பண்ணி அப்படியெல்லாம் செஞ்சுடாதீங்க, ஸார்.. அவர் குடிக்கிறவர்தான். ஆனா கெட்டவரில்லை. நேத்தைக்கு ஏதோ ஆத்திரப்பட்டு அப்படி நடந்திருக்கலாம். நடந்ததை மறந்துட்டு மறுபடியும் அவரை வேலையில சேர்த்துக்குங்க ஸார்... நானும் அவரும் வீட்டைப் பகைச்சுக்கிட்டு காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க.. எங்களுக்கு எந்த ஆதரவும் கிடையாது, ஸார்.."

ராம்குமார் ஆச்சர்யப்பட்டான்.

"உங்க கல்யாணம் காதல் கல்யாணமா?"

நந்திதா தலையாட்டினாள்.

"கல்யாணம் நடந்து எவ்வளவு வருஷமிருக்கும்?"

"நாலு வருஷம்."

"குழந்தைங்க...?"

"இல்லை.."

ஒரு நிமிஷம் மௌனம் காத்துவிட்டு ராம்குமார் தொடர்ந்தான். "என்னோட அப்பா வளர்த்த இந்த கம்பெனி



யோட சட்ட திட்டங்கள் ரொம்பவும் கடுமையானவை மிஸஸ் ஞானேஷ். என்னோட பீரியட்ல நான் அதைக் கொஞ்சம் தளர்த்தியிருக்கேன். ஞானேஷ் குடிக்கிறார்ன்னு எனக்கு ஒரு மாசத்துக்கு முன்னாடியே நியூஸ் தெரியும்.. அவுட் ஆப் ஆபீஸ் அவர்ஸ்ல அவர் எப்படி வேணும்ன்னாலும் இருக்க அவர்க்கு உரிமையிருக்குன்னு நான் நினைச்சேன். ஆனா.. வெளியே நாலு பேர் சிரிக்கும்படியா நடந்துக்க ஆரம்பிச்சபோது தான்... நான் ஸ்டெப்ஸ் எடுக்க வேண்டிய நிலைமைக்கு வந்தேன்.. ஆதித்யா கம்பெனியோட அக்கௌண்டன்ட் குடிச்சுட்டு தெருவுல விழுந்து கிடந்தார்ன்னா அது உங்க குடும்பத்துக்கு மட்டும் அவமானமில்லை. கம்பெனிக்கும் அவமானம்தான்."

"இந்த ஒரு தடவை அவரை மன்னிச்சிடுங்க, ஸார்..."

"உங்க கணவரோட விவகாரம் போர்ட் டைரக்டர்ஸ் மீட்டிங் வரை போயிடுச்சி.. மிஸஸ் ஞானேஷ். இனிமே தனிப்பட்ட முறையில நான் எந்த முடிவையும் எடுக்க முடியாது. இந்த கம்பெனிக்கு மொத்தம் அஞ்சு டைரக்டர்ஸ்... அவங்க ஒவ்வொருத்தர் கிட்டேயும் தனிப்பட்ட முறையில் பேசி 'கன்வின்ஸ்' பண்ணனும்... நீங்க எதுக்கும் நாளைக்குச் சாயந்தரம் நாலு மணிக்கு வந்து என்னைப் பாருங்க."

"தேங்க் யூ ஸார்.."

கைகளைக் குவித்து விட்டு - அறையை விட்டு வெளியே வந்தாள் நந்திதா. குனிந்த தலை நிமிராமல் மேஜைகளுக்கு மத்தியில் நடந்து - ஆபீஸ் வரவேற்பறையைக் கடந்த பொழுது-

அந்த தூணுக்குப் பின்னாலிருந்து -

குரல் கேட்டது.

MithraVintha

"ஒரு நிமிஷம்... சிஸ்டர்."

திரும்பினாள்.

முகுந்தன் அரைச் சிரிப்போடு நின்றிருந்தான். கையிலிருந்த பாதி சிகரெட்டை வேஸ்ட் பின்னில் சுண்டினான். "என்ன... புருஷனுக்குத் தூது வந்தியா?"

"..."

"அவனோட உத்தியோகத்தைக் கிழிக்கப் போறாங்க.."

நந்திதா வெடித்தாள். "இதுக்கெல்லாம் காரணம் நீதான்டா.."

"புரிஞ்சுக்கிட்டா சரி...! நாளைக்கு உம் புருஷனுக்கு என்னாலே வேலை வாங்கித் தர முடியும். ஆனா நீ மட்டும் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டா போதும்... நான் போட்ட ஏழு நாள் சபதத்துல இரண்டு நாள் வீணாப் போயிடுச்சு..

"இன்னும் அஞ்சு நாள் இருக்கு.. அந்த அஞ்சு நாள்ல நீ எந்த நாள் சொன்னாலும் வர்றேன்.. இன்றைக்கு வரட்டுமா...? உன்னோட புருஷன் வேற ஊர்ல இல்லேன்னு கேள்விப் பட்டேன்... நீ சரின்னு ஒரு வார்த்தை சொல்லு...நான் இன்னிக்கே எம்.டி. கிட்டே பேசி.. உன் புருஷனோட மெமோவை கான்சல் பண்றேன்.."

"தூ..!"

நந்திதா உதட்டைக் குவித்து உமிழ்ந்த எச்சில் - முத்தென முகுந்தன் முகம் பூராவும் 'ஜில்'லென்ற ஸ்பரிசத்தோடு ஒட்டிக் கொண்டது.



கர்ச்சீப்பால் முகத்தை ஒற்றியபடி -

அவள் போவதையே வெறிக்கப் பார்த்தான் முகுந்தன்.

"ஸார்.."

முதுகுக்குப் பின்னால் ப்யூன் கனகசாமியின் குரல் கேட்டுத் திரும்பினான். அவன் சொன்னான்: 'எம்.டி. உங்களைக் கூப்பிடறார் ஸார்.."

"வர்றேன்.." வாஷ் பேஸினுக்குப் போய் முகத்தை அலம்பிக் கொண்டு எம்.டி. ராம்குமாரின் அறையை நோக்கிப் போனான் முகுந்தன். கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவனைப் பார்த்துப் புன்னகைத்தான் ராம்குமார்.

"ஞானேஷோட ஒய்ப் வந்துட்டுப் போனா.. பார்த்தீங்களா முகுந்தன்?"

"பார்த்தேன் ஸார்.."

"அன்னிக்கு ஆபீஸ் ஆண்டு விழாவில் பார்த்ததை விட இன்னிக்கு ரொம்பவும் அழகாக இருக்கா."

முகுந்தன் சிரித்தான். "நாம் ஒரு பொண்ணு மேலே ஆசைப்பட்டுட்டா.. அந்தப் பொண்ணை எந்தக் கோலத்துல எப்போ பார்த்தாலும் அழகாகத்தான் இருப்பா ஸார்... ஆபீஸ் வரைக்கும் வந்துட்டா.. இனிமே தொட்டுடலாம்.."

"ஒரு குடிகாரனுக்கு இவ்வளவு அழகான பொண்டாட்டியா!" ராம்குமாரின் கண்களில் காமம் வழிந்தது. "ஆளைப் பார்த்தா மசிஞ்சி வர்றது மாதிரி தெரியலையே, முகுந்தன். நீங்க சொன்னபடி அவ புருஷனு

Mithra Viatha PUBLIC LIBRARY

எதிர்பார்த்தபடியே தூது வந்திருக்கா. ஆனா நம்ம வழிக்கு வருவாளா?''

''கண்டிப்பா வருவா ஸார்... நான் வரவழைக்கிறேன். ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி அவ்வளவு கண்ணகித்தனமா பேசின டைப்பிஸ்ட் ரஞ்சனியைப் பத்தே நாள்லே உங்க பெட்ரூமுக்குக் கூட்டிட்டு வந்தேனா இல்லையா.. ஸார்?''

''அவ மாதிரியே எல்லாரும் இருந்துடுவாங்களா முருந்தன்?''

முருந்தன் கன்னத்தைச் சொறிந்து கொண்டு சிரித்தான். "ஒவ்வொரு பொண்ணுக்கும் ஒரு சாப்ட் கார்னர் இருக்கு ஸார். அதே மாதிரி ஒரு வீக்னெஸும் இருக்கும். சிலர்க்கு நகை, சிலர்க்குப் பணம், சிலர்க்கு செண்டிமெண்ட், இப்படி ஏதாவது ஒண்ணுல அவங்க வீக்கா இருப்பாங்க. அதை நாம சமயம் பார்த்து உபயோகப்படுத்திக்கணும். ஞானேஷோட ஒய்ப் நந்திதாவைப் பொறுத்தவரை அந்த மெமோ 'அஸ்திரம்' யூஸ்புல்லா இருக்கும். காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்ட ரெண்டு பேர்க்கும் சொந்தக்காரங்க யாருடைய ஆதரவும் கிடையாது. தன் காலில் தானே நின்றாக வேண்டிய நிலைமை. ஸோ நந்திதா நம்ம வழிக்கு வந்துதான் ஆகணும்.''

''நாளைக்குச் சாயந்திரம் வரச் சொல்லியிருக்கேன்..''

''அவளை ஜாக்கிரதையா டீல் பண்ணணும் ஸார்.. நான் இப்போ பேச்சுக் குடுத்துப் பார்த்தேன், மூஞ்சியில் துப்பிட்டுப் போயிட்டா..''

''நான் எப்படிப் பேசணுமோ.. அப்படிப் பேசி பெட்ல வீழ்த்தறேன்... நீங்க சீட்டுக்குப் போங்க, முருந்தன்.''



''ஸார்..''

''என்ன?''

''நாளையிலிருந்து ஒரு மூணு நாளைக்கு எனக்கு லீவு வேணும் ஸார். ஊருக்குப் போயிருக்கிற ஒய்ப்பைக் கூட்டிட்டு வரணும்.''

''போயிட்டு வாங்க முருந்தன். இந்த ஆபீஸ்ல உங்களுக்கு இல்லாத லீவா?''

''தாங்க் யூ ஸார்..''

முருந்தன் சிரித்துக் கொண்டே வெளியேறினான்.



7

கதவு தட தடவென்று தட்டப்படும் 'சத்தம்' கேட்டுச் சிரம சிரமமாய்க் கண் விழித்தாள் நந்திதா. ஜன்னலின் சூர்ய வெளிச்சம் ட்யூப்லைட் மாதிரி அடித்தது. கட்டிலினின்றும் புரண்டு பக்க வாட்டில் மேஜையின் மேலிருந்த டைம்பீஸைப் பார்த்தாள்.

மணி 8.15.

சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள்.

திகைப்பு மனசுக்குள் ஓடியது. எப்படி இவ்வளவு நேரம் அசந்து போய்த் தூங்கினோம்? யோசித்துக் கொண்டிருக்கும் போதே கதவு மறுபடியும் தட்டப்பட்டது.

வேகமாய்ப் போய்க் கதவைத் திறந்தாள்.

MithraVintha

வெளியே -

ஞானேஷ் கையில் சூட்கேஸோடும், முகத்தில் பயணக் களைப்போடும் நின்றிருந்தான். "என்ன நந்து... இன்னுமா தூங்கிட்டிருக்கே?"

"என்னமோ தெரியலைங்க. அசந்து போய்த் தூங்கிட்டேன். ரொம்ப நேரமா தட்டிட்டிருக்கீங்களோ..?"

"பத்து நிமிஷமா தட்டறேன்.."

சூட்கேஸை சோபாவில் வைத்துவிட்டு - 'தொப்'பென்று உட்கார்ந்தான் ஞானேஷ்.

"மதுரைக்குப் போனது என்னாச்சு?"

"தண்டம்.."

"ஏன்.. என்னாச்சு?"

"புதுசா வந்திருக்கிற யூனியன் லீடர் எனக்கே புத்திமதி சொல்றான். மானேஜ்மெண்ட் மெமோ கொடுத்தது சட்டப்படி சரிதானாம். எம்.டி.யோட காலையோ, கையையோ பிடிச்சு வேலைக்குச் சேர்ந்துருன்னு சொல்றான்.."

"அப்படியா சொன்னான், அந்த யூனியன் லீடர்?"

"ஆமா, சரியான முதலாளி அடிவருடிப் பசங்க.. என்னோட நம்பிக்கையை நாசம் பண்ணிட்டாங்க."

"சரி, இனிமே என்ன பண்ணப் போறீங்க?"

"அதான் புரியலை."



"நான் உங்க மெமோவை வாபஸ் வாங்க ஏற்பாடு பண்ணிட்டு வந்திருக்கேன்."

நந்திதா அவனுக்கு எதிராய் உட்கார்ந்தபடி புன்னகையோடு சொன்னாள்.

"நீயா?"

"ஆமா."

"எப்படி..?"

சொன்னாள். எம்.டி. ராம்குமாரைப் போய்ப் பார்த்ததையும் - அவனோடு பேசியதைப் பற்றியும் சொன்னாள்.

"அந்த ஆள்கிட்டே எதுக்காகப் போனே?"

"இந்தப் பிரச்னை சுமுகமாகத் தீர வேண்டுமே.. அதுக்குத்தான். உங்க எம்.டி. ரொம்ப நல்ல மாதிரியா எம் மனசுக்குப் படுது. நீங்க மெமோவைக் கையில் வாங்காமே ரகளை பண்ணிட்டு வந்ததினாலதான் பிரச்னை பெரிசாயிருக்கு. பிரச்னை பெரிசாயி டைரக்டர்ஸ் போர்டு மீட்டிங் வரை போயிருக்கு..."

"போர்டு மீட்டிங்ல என்ன பண்ணிடுவாங்களாம்... கிழிச்சுடுவாங்களா! என்னைக் கேட்காமே நீ எதுக்காக ஆபீஸுக்குப் போனே..! அந்தப் பொம்பளைப் பொறுக்கி கிட்டே போய் எதுக்காகக் கெஞ்சிக்கிட்டு நின்னே?"

"நாம இப்போ எந்த நிலையில் இருக்கோம்ன்னு உங்களுக்குப் புரியுதுங்களா? இருக்கிற வேலையை விட்டுட்டு உங்களாலே என்ன பண்ண முடியும்..?"

MithraVintha

"அதுக்காக?"

"அதுக்காக நாம தாழ்ந்து போறதுலே எந்தத் தப்பும் கிடையாது. யூனியன் லீடர்ஸைப் பெரிசா நம்பினீங்களே... இப்போ என்னாச்சு...? அந்த மெமோ பிரச்னையை நீங்க டீல் பண்ணாதீங்க.. நான் பண்ணிக்கிறேன்.. இன்னிக்கு சாயந்திரம் உங்க எம்.டி. என்னை வரச் சொல்லியிருக்கார்.."

"அந்த எம்.டி சரியான பொம்பளைப் பொறுக்கி.."

"பார்த்தா அப்படித் தெரியலை.. ரொம்பவும் டீஸன்டா தெரியறார்... உங்க மேலே நல்ல மதிப்பு வெச்சிருக்கார்... நான் இந்த பிரச்னையை முடிச்சு வெக்கிறேன். போதுமா? காப்பி சாப்பிடறீங்களா?"

"ம்.."

நந்திதா சேலைத் தலைப்பை இடுப்பில் செருகிக் கொண்டு - சமையலறைக்குள் நுழைந்தாள். சமையலறைத் திட்டின் மேல் பாலை ஊற்றி வைத்திருந்த கிண்ணமும், கிண்ணத்தை மூடி வைத்திருந்த தட்டும் திசைக்கொன்றாய் உருண்டு கிடந்தன.

"அடடே..!"

"என்ன நந்து?"

"பாழாப் போன பூனை எல்லாப் பாலையும் குடிச்சுட்டுப் போயிடுச்சு... நேத்தைக்கு ராத்திரி மில்க் பார் சுகுமார் அரை லிட்டர் பாலைக் கொண்டாந்து கொடுத்திட்டுப் போனான். நான் ஒரு டம்ளர் பாலைக் காய்ச்சிக் குடிச்சிட்டு மீதிப் பாலை அப்படியே கிண்ணத்தில் ஊற்றி வெச்சிருந்தேன். அந்த எமகாதகப் பூனை எப்படியோ உள்ளே வந்து பாலைக்



கபளீகரம் பண்ணிட்டுப் போயிடுச்சு.. ஒரு ரெண்டு நிமிஷம் உட்காருங்க.. நான் மில்க் பார்க்கு போய் பாலை வாங்கிட்டு வந்திடறேன்.." பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வாசற்படி இறங்கி - வேகமாய் நடந்து போய் மில்க் பாரை நெருங்கினாள்.

கேஷ் கௌண்டரில் உட்கார்ந்து ரூபாய் நோட்டுக்களை எண்ணிக் கொண்டிருந்த சுகுமார் ஆச்சர்யமாய் நிமிர்ந்தான்.

"என்னக்கா?"

"பால் வேணும்.."

"நேத்தைக்கு ராத்திரி அரை லிட்டர் கொடுத்தப்போ நாளைக்குக் காலையில் பால் வேண்டாம்ன்னு சொன்னீங்க.. இப்போ திடீரென்று வந்து நிக்கறீங்க?"

"அவர் ஊர்லேயிருந்து வந்துட்டார் சுகுமார். ராத்திரி மிச்சம் வைத்திருந்த பாலைப் பூனை குடிச்சுடுச்சு.."

"அப்போ எவ்வளவு பால் வேணும்?"

"அரை லிட்டர்.."

"வக்கீலம்மா வீட்டுக்கு வெச்சிருந்த பாலை உங்களுக்குத் தர்றேன்க்கா... அந்த அம்மா வந்து கேட்டா என்ன சொல்றதுன்னு தெரியலை."

"அப்போ ஒண்ணு பண்ணு, சுகுமார்..."

"என்னக்கா..?"

"எனக்குக் கால் லிட்டரும் அந்த அம்மாவுக்குக் கால் லிட்டரும் குடுத்துடு."

MithraVintha

"அதும் சரிதான்..."

கேஷ் கௌண்டரை விட்டு வெளியே வந்து - பாத்திரத்தை வாங்கிக் கொண்டு கடைக்குள் போனான் சுகுமார். இரண்டாவது நிமிஷம் பால் ததும்புகிற பாத்திரத்தோடு வந்தான்.

"ஏன்க்கா, நான் ஒரு விஷயம் கேள்விப்பட்டேன்.. நிஜந்தானா..?"

"என்ன கேள்விப்பட்டே..?"

"அண்ணனுக்கு ஆபீஸ்ல சஸ்பென்ஷன் மெமோ குடுத்து ஏகப்பட்ட கலாட்டாவாமே..!"

"உனக்கு யார் சொன்னது..?"

"அந்த ஆபீஸ் ப்யூன் கனகசாமி.."

"அவனை எப்படி உனக்குத் தெரியும்?"

"நான் குடியிருக்கிற வீட்டுக்குப் பக்கத்து வீட்லதான் அவன் குடியிருக்கிறான். ஆபீஸ்ல நடந்த எல்லா விபரத்தையும் சொன்னான்.. நீங்க கூட எம்.டியைப் பார்க்கப் போயிருந்தீங்களாமே?"

"ஆ..ஆமா."

"அந்த எம்.டி. கொஞ்சம் மோசமான ஆளாம்.. பார்த்து நடந்துக்குங்க அக்கா.."

சுகுமார் சொல்ல...



முதல் முறையாய் நெஞ்சில் ஒரு 'திக்'காகினாள் நந்திதா... சாயங்காலம் நான்கு மணிக்கு அவனைச் சந்திக்கப் போகலாமா வேண்டாமா..?"

யோசனையோடு வீட்டை நோக்கிப் போனாள் நந்திதா.



8

மாலை நான்கு மணி.

வானத்தில் மேகங்கள் மழை பெய்கிற முஸ்தீபில் இருக்க - சூரியன் வீரியம் ஜீரோ வாட்ஸுக்குப் போயிருந்தது.

நந்திதா ஆட்டோ ஒன்றிலிருந்து இறங்கி ஆபீஸுக்குள் நுழைந்தாள். ப்யூன் கனகசாமி வழி நடத்திக் கொண்டு போய் - ராம்குமார் அறைக்குள் விட்டான்.

"வாங்க மிஸஸ் ஞானேஷ்.. மழை வர்ற மாதிரி இருக்கு. வருவீங்களோ மாட்டீங்களோன்னு நினைச்சேன்.."

"ஸார்.. என் கணவரோட மெமோ...?"

"மொதல்ல உட்காருங்க, மிஸஸ் நந்திதா."

அவள் உட்கார்ந்தாள்.

"ஏதாவது சாப்பிடறீங்களா? டீ.. காப்பி.. ஏதாவது..?"

"வேண்டாம். வரும்போதுதான் நான் சாப்பிட்டு வந்தேன்.."

"சரி, உங்க ஹஸ்பண்ட் மதுரையிலிருந்து வந்திட்டார் போலிருக்கே!"

MithraVintha

"ஆமா.."

"யூனியன் லீடர் கிட்டே போனாலும் சரி.. சுப்ரீம் கோர்ட் நீதிபதிகிட்டே போனாலும் சரி, உங்க ஹஸ்பண்ட் எதுவும் பண்ண முடியாது."

"அதை நான் புரிஞ்சுகிட்டதாலேதான் உங்ககிட்டே வந்திருக்கேன் ஸார்... அவர் ஆபீஸ்ல தாறுமாறா நடந்துகிட்டதுக்காக நான் உங்ககிட்டே மன்னிப்புக் கேட்டுக்கறேன்."

ராம்குமார் சிரித்தான்.

"வெறும் மன்னிப்புக் கேட்டுகிட்டா மாத்திரம் மெமோவை வாபஸ் வாங்க முடியுமா...? அதுவும் விஷயம் போர்டு டைரக்டர்ஸ் மீட்டிங் வரை போன பின்னாடி..?"

"வேற என்ன ஸார் பண்ணணும்?"

"நான் சொன்னா பண்ணுவீங்களா, மிஸஸ் நந்திதா?"

"சொல்லுங்க ஸார்.."

"என்னோட கெஸ்ட் ஹவுஸுக்கு ஒருநாள் நீங்க வரணும்."

"எதுக்கு?"

"உங்க கணவர் உங்ககிட்டே என்னென்ன உரிமை எடுத்துக்குவாரோ.. அந்த உரிமையையெல்லாம் அன்னிக்கு ஒரு நாள் நான் எடுத்துப்பேன்.."

நந்திதா அவனை முறைத்தாள். ராம்குமார் சிரித்தான். "நான் என்ன சொல்ல வரேன்னு உங்களுக்குப் புரிந்திருக்கும்."

"நல்லாவே புரியுது."



"குட், உங்க முடிவென்ன?"

"டைரக்டர்ஸோட போர்டு மீட்டிங்கிலே சொல்லி என்னோட கணவரை டிஸ்மிஸ் பண்ணிடுங்க."

ராம்குமார் அயர்ந்து போனான்.

"மிஸஸ் நந்திதா...."

"நீயெல்லாம் ஒரு ஆம்பிள்ளை? உனக்கெல்லாம் ஒரு மானேஜிங் டைரக்டர் போஸ்ட்? வீட்ல இருக்கிற பொண்டாட்டிக்கு ஒழுக்கமான புருஷனா இருய்யா. உன் பொண்டாட்டிகிட்டே எவனாவது இந்தக் கேள்வியைக் கேட்டா நீ சும்மா இருப்பியா?"

"ஏய்..ய்...."

"வர்றேன்டா."

நந்திதா ராம்குமாரின் அறைக் கதவைப் படார்ன்னு தள்ளிக்கொண்டு வெளியே வந்தாள்.



9

ராத்திரி ஒன்பது மணி.

மழை வெளியே 'சளசள'வென்று பெய்து கொண்டிருக்க, ஈஸி சேரில் சாய்ந்து கண் மூடியிருந்தான் ஞானேஷ். அவனுக்குக் கொஞ்சம் தள்ளி சோபாவில் நந்திதா மோவாயைத் தாங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

'நந்து.."



Mithra Vintha

''ம்..''

''அந்த ராஸ்கலை நீ சும்மா விட்டுட்டு வந்தது தப்பு. கால்ல இருக்கிற ஸ்லிப்பரைக் கழட்டி அவனுடைய உச்சந் தலையில 'நச்'ன்னு அடிச்சிருக்கணும்.''

''அப்ப எனக்கு அது தோணலை... ஆபீஸை விட்டு வெளியே வந்த பின்னாடிதான் தோணிச்சு.''

''நான் நாளைக்குக் காலையில் போய் அடிச்சுட்டு வரட்டுமா?''

''அதெல்லாம் வேண்டாம். அவங்க பணம் இருக்கிற ஜாதி. எதை வேணுமானாலும் பண்ணுவாங்க.. நீங்க வேற உத்தியோகத்தைத் தேடறதுதான் உத்தமம்.''

''குடி குடியைக் கெடுக்கும்ங்கிறது எவ்வளவு அறிவு பூர்வமான உண்மை. அந்த ராஸ்கல் முகுந்தன் என் கூட இருந்துகிட்டே..''

''சரி... போனதைப் பத்தி என்ன பேச்சு... சாப்பிட வர்றீங்களா?''

''எனக்குப் பசியில்லை..''

''அப்ப எனக்கும் வேண்டாம். படுத்துத் தூங்கலாம்.'' சொல்லிக் கொண்டே நந்திதா எழுந்து போய் முன் பக்க வாசல் கதவை அடைத்து விட்டு வந்தாள்.

''பின்பக்கத் தோட்டக் கதவை நீங்கதான் அடைக்கணும்.''

''ஏன்..?''



''தாழ்ப்பாள் இறுகிப் போயிருந்தது. என்னால் முடியலை.. நீங்கதான் போடணும்.'' நந்திதா சொல்ல - ஞானேஷ் ஈஸி சேரை விட்டு எழுந்தான். வீட்டின் பின் பக்கமாய்ப் போய் ஸ்விட்சைத் தட்டி விட்டு - அது கொட்டிய வெளிச்சத்தில் - நான்கைந்து வாழை மரங்களுக்கும், ஒரு நெல்லிக்காய் மரத்துக்கும் நடுவில் நடந்து புழக்கடைக் கதவை நெருங்கினான்.

மழை இப்போது ஓய்ந்து போய் - பூவாளித் தூறலாய்த் தூறிக் கொண்டிருந்தது. புழக்கடையின் மரக் கதவை அழுத்தமாய் அறைந்து சாத்தி - தாழ்ப்பாளைச் சிரமப்பட்டுப் போட்டுவிட்டுத் திரும்பினான்.

பார்வை சட்டென்று திகைத்தது.

அந்த நெல்லிக்காய் மரத்துக்குக் கீழே - 'பொத் பொத்' தென்று ஊறியிருந்த மணலில் அரையடி அகலப் பரப்பில் கறுப்பாய் ஏதோ தெரிந்தது.

''என்ன அது?''

குழப்பமாய் அதை நோக்கிப் போனான் ஞானேஷ். அருகே நெருங்கியதும் அதைக் குனிந்து உற்றுப் பார்த்தான்.

''அங்கே என்னத்தைப் பார்த்துட்டு அப்படி நின்னுகிட்டிருக்கீங்க?''

''நந்து... கொஞ்சம் இங்கே வா.''

''என்னங்க..?''

''அதை வந்து பாரு...''

MithraVintha

நந்திதா போய்ப் பார்த்தாள். பார்த்தவள் வேகமாய் முகம் மாறிச் சொன்னாள். "என்னமோ தலைமுடி தெரியுது."

"தலைமுடியேதான்."

"அது யாரோட முடி..?" கேட்டுக் கொண்டே அருகேயிருந்த ஒரு குச்சியை எடுத்துக் கிளறினான் ஞானேஷ்.

கிளறக் கிளற -

அந்த தலைமுடிக்குக் கீழ் மண்ணோடு பிசையப்பெற்ற அந்த மனித முகம் மெல்ல மெல்ல மேலே வந்தது. நெற்றியும், மூக்கும், மூடிய கண்களும், புழக்கடை வெளிச்சத்தில் ஸ்பஷ்டமாய்த் தெரிய -

ஞானேஷும் - நந்திதாவும் முதுகுத் தண்டு வடங்களில் முடிச்சு முடிச்சாய் உறைந்தார்கள். கண்ணின் பாவைகள் மிரண்டு போய் - அப்படியே நின்றன. நந்திதா திடுக்கிட்டாள்.

'எ.. என்னங்க... இது?"

"நந்து.. யாரோ.. பாடியைக் கொண்டு வந்து... இங்கே புதைச்சுட்டுப் போயிருக்காங்க.. நான் போய் போலீஸுக்குத் தகவல் சொல்லிட்டு.. வர்றேன்... நீ வாசல் பக்கமா வந்து உட்கார்ந்திட்டுரு.."

நகர முயன்ற கணவனை - சட்டென்று கையைப் பிடித்து நிறுத்தினாள் நந்திதா. "ஒரு நிமிஷம் நில்லுங்க.."

"என்ன நந்து?"

அவள் குரல் நடுங்கியது. "அந்தப் பொணத்தோட முகத்தைப் பார்த்தீங்களா...? உங்க பிரண்ட் முகுந்தன் மாதிரி இல்லே.."



ஞானேஷ் திடுக்கிட்டுப் போய்...

மண்ணில் புதையுண்டு கிடக்கும் அந்தத் தலையை உற்றுப் பார்த்தான்.

முகுந்தனேதான்!



10

மழை இன்னமும் லேசாய்த் தூறிக் கொண்டிருக்க, அதில் தெப்பல் தெப்பலாய் நனைந்து கொண்டிருக்கிறோம் என்கிற உணர்வேயில்லாமல் ஞானேஷும், நந்திதாவும் அந்தப் புழக்கடை வெளிச்சத்தில் உறைந்து போய் நின்றிருந்தார்கள்.

"எ.. எ.. எப்படிங்க.. இ.. இ.. இ... இந்தப் பொணம்... யா.. யார்.. கொண்டு வந்து இ.. இப்படி.. இங்கே?"

ஞானேஷ்... மழை நீரில் மண் பூராவும் கரைந்து போய்ப் பளிச் சென்று தெரிந்த முகுந்தனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். நந்திதா நடுங்கும் உடம்போடு அவனையொட்டி நின்று கொண்டாள்.

"நந்து.."

"எ.. ன்.. ன..ங்..க."

"போய் மண் வெட்டியை எடுத்துட்டு வா.."

"எதுக்குங்க?"

"மண்ணைத் தோண்டிப் பாடியை வெளியே எடுக்கலாம்."

MithraVintha

"எடுத்து என்ன பண்ணப் போறீங்க?"

"முகுந்தன் எப்படிச் செத்தான்ங்கிற விபரம் தெரியலாம், போ. போய்க் கொண்டா."

நந்திதா மழையில் நனைந்து கொண்டே போய் - ஸ்டோர் மேலிருந்த அந்த மண் வெட்டியை எடுத்து வந்தாள். அதைக் கைகள் நடுங்க வாங்கிக் கொண்ட ஞானேஷ் மழைத் துளிகள் சொட்டும் முகத்தோடு அவளை ஏறிட்டான்.

"நந்து..."

"ம்..."

"முன் பக்க வாசல் கதவு தாழ்ப்பாள் போட்டிருக்கியா?"

"போ.. போட்டிருக்கேன்."

ஞானேஷ் மண் வெட்டியால் மழையால் நொதநொதத்துப் போயிருந்த தரையைக் கொத்த ஆரம்பித்தான். மண் சுலபமாய்க் கீழே இறங்கிக் கொண்டு போக - முகுந்தன் கொஞ்சம் கொஞ்சமாய் வெளியே வந்தான். மழைத் தண்ணீரில் ஊறியிருந்த உடம்பு லேசாய் வீச்சமடித்தது.

நந்திதாவின் கண்களில் நீர் கோர்த்தது. உதடுகள் நடுங்கியது.. "இ.. இ.. இவனைக் கொன்னவங்க... நம்ம வீட்ல எப்படிங்க கொண்டு வந்து புதைச்சாங்க..?"

"அதான் நானும் யோசிச்சிட்டிருக்கேன் நந்து. நான் மதுரைக்குப் போயிருந்த நேரத்தில் அந்தக் காரியத்தை யாரோ பண்ணியிருக்காங்க... செத்தது வேற யாராயிருந்தா இந்நேரம் போலீஸுக்குத் தகவல் சொல்லியிருக்கலாம். இப்போ இருக்கிற



சூழ்நிலையில முகுந்தன்... எனக்கு எதிரி.. அவனை நான்தான்..."

ஞானேஷ் பேச்சை முடிக்கவில்லை.

"த்தட்.. த்தட்..."

வாசல் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

குபீரென்று தலைகளை நிமிர்த்தி ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள் ஞானேஷும், நந்திதாவும்.

"இ... இந்நேரத்துக்கு யார் வந்து கதவைத் தட்றாங்க?" ஞானேஷ் மண் வெட்டியைக் கீழே போட்டுவிட்டு அருகேயிருந்த தொட்டித் தண்ணீரில் கைகளைக் கழுவிக் கொண்டான்.

"நந்து... நான் போய்க் கதவைத் திறந்து யார்ன்னு பார்க்கிறேன். நீ ஒரு கோணிப் பையை எடுத்து வந்து... பொணத்தை மூடி வை.."

"சரிங்க." நந்திதா குளிரோடு தலையை ஆட்ட -

ஞானேஷ் முன் பக்கக் கதவை நோக்கிப் போனான். கதவு பொறுமையில்லாமல் தட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

"யாரது?"

குரல் கொடுத்துக் கொண்டே வேகமாய்ப் போய் - கதவை 'ப்ளக்' என்று திறந்தான் ஞானேஷ்.

கதவுக்கு வெளியே -

Mithra Vintha

வாசற்படியில் அந்த இன்ஸ்பெக்டர் தெரிய - அவர்க்குப் பின்னால் - மழையில் நனைந்தபடி போலீஸ் ஜீப் நின்றிருந்தது.

ஜீப்புக்குள் கான்ஸ்டபிள்கள் அசைந்தார்கள்.

ஞானேஷ் திடுக்கிட்டுப் போய் -

மெல்ல ஓரடி பின் வாங்கினான்.



11

தலையிலிருந்த தொப்பியைக் கழற்றிக் கொண்டே இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் உள்ளே நுழைய - அவர் நிழல் மாதிரி சப் - இன்ஸ்பெக்டர் அவினாஷ் தொடர்ந்தார்.

ஞானேஷ் குழறினான்.

''வாங்க வாங்க... இன்ஸ்பெக்டர்..''

''நீங்க மிஸ்டர் ஞானேஷ்?''

''எஸ் இன்ஸ்பெக்டர்..''

''இப்போ வீட்ல யார் யார் இருக்கீங்க?''

''நானும் என்னோட ஒய்ப்பும்..''

''உங்க ஒய்ப் எங்கே?''

''உள்.. ளே.. உள்ளே இருக்கா? என்ன விஷயம் ஸார்?''

''சில நிமிஷங்கள் முன்னாடி.. பப்ளிக் டெலிபோன் பூத்திலிருந்து யாரோ ஒருத்தர் எங்களுக்குப் போன் பண்ணினார். அது சம்பந்தமா விசாரிக்க வந்தோம். உங்க



வீட்டுப் பின் பக்கத்தை நாங்க பார்க்கணும்...'' சொல்லிக் கொண்டே நவநீதகிருஷ்ணன் உள்ளே போக - அவரைத் தடுக்க முடியாமல் திணறினான் ஞானேஷ்.

நவநீதகிருஷ்ணன் அவினாஷோடு பின் பக்கத்தை நெருங்கினார். நெல்லி மரத்துக்குக் கீழே - கோணிப் பையைப் போட்டு முருகந்தனின் பிணத்தை மூட முயற்சித்துக் கொண்டிருந்த நந்திதாவைப் பார்த்துப் புன்னகைத்தார்கள்.

''மத்த வேலையெல்லாம் நாங்க பார்த்துக்கிறோம்மா.. இப்படி கொஞ்சம் வந்திடறியா...'' நவநீதகிருஷ்ணன் குரலைக் கேட்டதும் விதிர் விதிர்த்துப் போய் - நிமிர்ந்தாள் நந்திதா. அவள் கையிலிருந்த கோணிப் பை நழுவியது.

அவினாஷ் உற்சாகமாகச் சொன்னார்.

''ஸோ.. நமக்கு வந்த போன்கால் உண்மை ஸார்..''

''ஞானேஷ்... இப்படி வரீங்களா?''

ஞானேஷ் கலவரமாய் நவநீதகிருஷ்ணனை நெருங்கினான். மழையில் நனைந்த தலைமுடி பிரி பிரியாய் நெற்றியில் ஒட்டியிருந்தது.

''பாடி யாருடையது?''

''முருகந்தன்னு ஒரு பிரண்ட்டோடது ஸார்..''

''உங்க ப்ரண்ட்தானே?''

''ஆமா ஸார்..''

''எதுக்காகக் கொலை செஞ்சீங்க?''

MithraVintha

"நான் கொலை செய்யலை ஸார்."

"பின்னே உங்க மனைவியா?"

"அவளும் இல்ல ஸார். யாரோ இவனைக் கொன்னு, எங்க வீட்டுக்குப் பின்னாடி கொண்டு வந்து புதைச்சிருக்காங்க ஸார்..."

"யார் புதைச்சாங்க?"

"தெரியலை ஸார்."

"அதெப்படி உங்களுக்குத் தெரியாம போகும்? உங்க வீட்ல உங்களுக்குத் தெரியாம பொணத்தை எப்படிப் புதைக்க முடியும்?"

"நான் ரெண்டு நாளா வீட்ல இல்ல ஸார் - மதுரை போயிருந்தேன். என்னோட ஒய்ப் மட்டும்தான் வீட்ல இருந்தா."

நவநீதகிருஷ்ணன் நந்திதா பக்கம் திரும்பினார்.

"ஏம்மா... அந்தப் பாடியை யார் கொண்டு வந்து புதைச்சாங்கன்னு தெரியுமா?"

"தெரியாது ஸார்."

"என்னம்மா இது. புருஷனும் - பொண்டாட்டியும் மாறி மாறிக் கதை சொல்லிட்டிருக்கீங்க.. ரெண்டு பேரையும் உள்ளே தள்ளி - போலீஸ் மரியாதையோட விசாரிச்சாத்தான் உண்மையைச் சொல்லுவீங்க போலிருக்கு! அவினாஷ்!"

"ஸார்!"



"ரெண்டு பேரையும் ஜீப்புக்குக் கொண்டு போங்க." சொன்ன நவநீதகிருஷ்ணன் - மண்ணோடு பிசையப் பட்டு - சதைப் பிண்டமாய்க் கிடக்கும் முருந்தன் உடலை நோக்கிப் போனார். கர்ச்சீப்பால் முகத்தைப் பொத்திக் கொண்டு - உடலருகே குனிந்தார்.



## 12

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் மோவாயைத் தாங்கியிருக்க - எதிரே யிருந்த நாற்காலியில் சப் - இன்ஸ்பெக்டர் அவினாஷ் நிரம்பியிருந்தார். காலை பத்து மணி.

மேஜையின் மேல் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் கிடந்தது. "தலையோட பின் பக்கத்துல எதாலேயோ மூர்க்கமான அடி விழுந்ததாலே மரணம்ன்னு பி.எம். ரிப்போர்ட் சொல்லுது.. அவினாஷ்.. உடம்போட மத்த பகுதியிலே எந்த விதமான காயமும் இல்லை..."

"அந்த ஞானேஷைப் பத்தி என்ன நினைக்கிறீங்க ஸார்?"

"ஆதித்யா கம்பெனி மானேஜிங் டைரக்டர் ராம்குமார் தன்னோட விசாரணையில் ரொம்பவும் தெளிவாச் சொல்லியிருக்கார். முருந்தனுக்கும், ஞானேஷுக்கும் நாலைஞ்சு நாளாவே டெர்ம்ஸ் சரியில்லையாம். ஆபீஸ்ல ரெண்டு பேரும் கட்டிப் பிடிச்சுச் சண்டை போட்டிருக் காங்களாம். ஞானேஷ் மதுரை போறதா சொல்லிட்டு - இதே ஊர்ல இருந்து முருந்தனைத் தீர்த்துக் கட்டியிருக்கலாமே!"

MithraVintha

''எனக்கொரு சந்தேகம் ஸார்.''

''சொல்லுங்க.''

''கொலை செஞ்சவங்க யாருமே... பாடியைத் தன்னோட வீட்லேயே புதைச்சி வெச்சிக்க மாட்டாங்க ஸார்.. வெளியே கொண்டு போய் - டிஸ்போஸ் பண்ணத்தான் பார்ப்பாங்க.''

''வெளியே கொண்டு போகச் சந்தர்ப்பம் வாய்க்காமே இருந்திருக்கலாமே!''

''போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்படி முகுந்தனோட மரணம் நேற்றைக்கு முன் தினம் ராத்திரி பதினோரு மணிக்கு நடந்திருக்கு. பாடியை அன்னிக்குப் பெய்ஞ்ச மழையில் - தரை பரப்பு ஊறி... சரியா புதைக்கப்படாத முகுந்தனோட பொணம் தலையை நீட்டியிருக்கு.. மொதல் மொதலா அப்போதுதான் அந்தப் பொணத்தைப் பார்த்ததா ஞானேஷும் அவரோட ஒய்ப்பும் சொல்றாங்க.. அதை என்னால நம்ப முடியலை.. கணவனும் மனைவியும் - வெளியே வந்துட்ட பொணத்தை மறுபடியும் சரியா புதைக்கிறதுக்காக முயற்சி பண்ணியிருக்காங்க.. யாரோ அதைப் பார்த்துட்டு - நமக்கு டெலிபோன் பண்ணி விஷயத்தைச் சொல்லியிருக்காங்க..''

அவினாஷ் யோசித்துவிட்டுச் சொன்னார்.

''போன்ல பேசின ஆசாமி தான் யார்ங்கிறதைச் சொல்லலை ஸார்.''

''யாராவது பக்கத்து வீட்டுக்காரங்களா இருக்கலாம். பேரைச் சொன்னா நாம என்கொயரிக்காக அவங்களை நெருக்குவோம்ன்னு பயந்துக்கிட்டுப் பேரைச் சொல்லாமே



இருக்கலாம்! அவினாஷ்! நடந்த சம்பவத்தை இப்படி கற்பனை பண்ணிப் பாருங்களேன்.. ராம்குமாரோட ரிப்போர்ட்படி ஞானேஷ் ஒரு டிரங்கார்ட்.. குடிக்கு அடிமையானவன்.. அவனுடைய ஒரே சிநேகிதன் முகுந்தன். ஞானேஷ் குடி மயக்கத்துல மயங்கிக் கிடந்தப்போ முகுந்தன் நந்திதா கிட்டே வாலாட்டியிருக்கான். அவ மறுக்க - முகுந்தன் இன்னும் ஏழு நாள்ல அவளைத் தொடப் போறதா பேரம் பண்ணியிருக்கான். ஞானேஷ் மதுரை போறதா வீட்ல சொல்லிட்டு - இதே ஊர்ல பதுங்கியிருந்து - முகுந்தனை வாட்ச் பண்ணி இருந்திருக்கான். உண்மையிலேயே ஞானேஷ் மதுரை போயிட்டதா நினைச்சு - நந்திதாவைத் தொட்டு தன்னோட சபலத்தை நிறைவேற்ற முகுந்தன் - பின் பக்கமா சுவரேறிக் குதிச்சு வீட்டுக்கு வந்திருக்கான். அவனைப் பின் தொடர்ந்து வீட்டுக்குள்ளே வந்த ஞானேஷ் - முகுந்தனைத் தாக்கிக் கொன்னிருக்கான். நந்திதாவுக்குத் தெரியாமயோ.. தெரிஞ்சோ... பாடியை வீட்டுக்குப் பின் பக்கம் அடக்கம் பண்ணியிருக்கான் ஞானேஷ்..''

''கொலை நடந்ததாகச் சொல்லப்படுகிற அந்த நேரத்துல தான் மதுரை லாட்ஜ்ல தங்கியிருந்ததை லாட்ஜ் ரசீதோட ஞானேஷ் காட்டியிருக்கானே ஸார்!''

''தாராளமா காட்டலாம். கோயமுத்தூரிலிருந்து மதுரைக்கு இருபது நிமிஷத்துல ப்ளைட்ல போகலாம்... வரலாம். சந்தர்ப்பங்களும் சாட்சியங்களும் ஞானேஷுக்கு எதிரா - வலுவா இருக்கு. ஆனா கேஸை ஃபைல் பண்ணி கோர்ட்டுக்குக் கொண்டு போனா கேஸ் கடைசி வரை நிக்கணும்.''

''இந்தக் கேஸ் நிக்கும் ஸார்.''

MithraVintha

"வாரம் பத்து நாள் பார்த்துட்டு ஞானேஷ் மேலே கேஸ் பைல் பண்ணிக் கோர்ட்டுக்குக் கொண்டு போயிடலாம். நேத்தைக்கு எஸ்.பி. கிட்டே பேசிட்டிருக்கும் போதும் - இதையேதான் சொன்னார்."

நவநீதகிருஷ்ணன் சொல்லிவிட்டு -

மேஜையிலிருந்து போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டை எடுத்துப் பக்கங்களைப் புரட்டி - 'செக்ஸுவல் இண்டர்கோர்ஸ்' என்கிற காலத்திற்கு வந்தார்.

அவினாஷ் புன்னகைத்தபடி சொன்னார்.

"நான் அந்தக் காலத்தை மொதலிலே பார்த்துட்டேன் ஸார். முகுந்தன் கொலை செய்யப்படுவதற்கு முன்பு செக்ஸுவல் இண்டர்கோர்ஸ் வெச்சுக்கவேயில்லைன்னு பி.எம். ரிப்போர்ட் தீர்க்கமா சொல்லுது."

"ஸோ நந்திதாவை 'டச்' பண்றதுக்கு முன்னாடியே முகுந்தன் தீர்க்கப்பட்டிருக்கான்.."

"எஸ் ஸார்.."



13

"அடடா!"

- ஆச்சரியப்பட்டான் ராம்குமார்.

இடம்: அவனுடைய பங்களாவின் வரவேற்பறை. சடை நாயொன்று சோபாவுக்குக் கீழே சுருண்டிருக்க- டீபாயின் மேலிருந்த பிளவர் வாஸில் செயற்கையான அவென்யூ பூக்கள் சிரித்தன.



மெலிதான நீல நிற கண்ணாடித் தொட்டியில் தங்க மீன்கள் சோகமாக நீந்தின.

"வா.. நந்திதா.. உள்ளே வா..." விரலிடுக்கில் புகைந்து கொண்டிருந்த சிகரெட்டை ஆஷ்ட்ரேக்குக் கொடுத்துவிட்டு வரவேற்றான் ராம்குமார்.

நந்திதா புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு உள்ளே வந்தாள். இந்த ஒரு வார காலத்திற்குள் நந்திதாவின் முகம் - உப்புத்தாளாய் உலர்ந்து போயிருந்தது. கண்களிலும் உதடுகளிலும் முன்பு தொற்றியிருந்த உயிர்ப்பு இப்போது காணாமல் போயிருந்தது.

"உட்கார் நந்திதா."

அவள் உட்காராமல் அவனையே பார்த்தாள்.

"மாஜிஸ்ட்ரேட் உம் புருஷனை லாக்-அப்புல வெக்கச் சொல்லிட்டு உன்னை வீட்டுக்குப் போகச் சொல்லிட்டாராமே?"

நந்திதா இன்னமும் அவனையே முறைத்துக் கொண்டு நின்றாள்.

"என்ன நந்திதா... அப்படி பார்க்கிறே?"

"அப்போ உனக்கு சந்தோஷந்தானே..?"

"எனக்கென்ன சந்தோஷம்?"

"முகுந்தனைத் தீர்த்துக்கட்டி - என் வீட்டுக்குப் பின்னாடியே உன்னோட ஆட்களை விட்டுப் புதைக்க வெச்சு அவரை போலீஸுக்குக் காட்டிக் குடுத்ததுல உனக்கு சந்தோஷம் தானே?"

MithraVintha

ராம்குமார் சிரித்தான்.

''முட்டாள் தனமா உளறாதே நந்திதா.. முகுந்தனை நான் எதுக்காகக் கொலை செய்யணும்? அவன் எனக்கு எவ்வளவோ உதவியா இருந்தவன். அஃபிஷியலாயும் பர்சனலாகவும்..''

''இந்த நடிப்பெல்லாம் என்கிட்டே வேண்டாம்.. முகுந்தனை நீதான் கொன்னிருக்கணும்... நான் உன்னோட ஆசைக்கு உடன்படலைங்கிற காரணத்துக்காக - என்னோட வாழ்க்கையை நாசமாக்க நினைச்சுட்டே. அதுக்கெல்லாம் அந்தக் கடவுள் உனக்குத் தண்டனை கொடுக்காம போக மாட்டார்..''

ராம்குமார் மறுபடியும் சிரித்தான். ''நான் தப்பு பண்ணியிருந்தாத்தானே அந்தக் கடவுள் எனக்குத் தண்டனை குடுப்பார். உன்னோட புருஷன் ஞானேஷைப் பத்தி எனக்குத் தெரிஞ்ச அளவுக்கு உனக்குத் தெரியாது. அவன்தான் முகுந்தனைத் தீர்த்துக் கட்டியிருக்கணும்... உனக்கும் இந்த விஷயம் தெரிந்திருக்கலாம். புருஷனோட உயிரைக் காப்பாத்தறதுக்காக... நீ இந்த மாய்மாலம் பண்ணிட்டிருக்கே. நான் நினைச்சா உன்னோட புருஷனை ஜாமீன்ல எடுக்க முடியும்.. ஒரு நல்ல வக்கீலை வைச்சு வாதாடி இந்தக் கொடும் பழியிலிருந்து காப்பாத்தவும் முடியும்..''

நந்திதா கைகளைக் குவித்தாள்.

''தயவு பண்ணி அவரைக் காப்பாத்துங்க...''

''நான் உன் புருஷனைக் காப்பாத்தனும்ன்னா... நீ வாரத்துல ரெண்டு தடவையாவது என்னோட கெஸ்ட் ஹவுஸுக்கு வரணும்.''



''..''

''என்ன பார்க்கிறே... நந்திதா?''

''நீ ஒரு பெண்ணோட வயித்திலிருந்து பொறந்தியா...? இல்லே ஒரு மிருகத்தோட வயித்திலிருந்து பொறந்தியா..?''

''இந்த சினிமா டயலாக்கையெல்லாம் கேட்டிட்டிருக்க எனக்கு நேரமில்லை நந்திதா. நான் உனக்கு உதவி பண்ற மாதிரி நீ எனக்கு ஒத்தாசை பண்ணு... ம்யூச்சுவல் ஹெல்ப்... எனக்கு எஸ்.பி., டி.எஸ்.பி. எல்லோரையும் தெரியும். ஒரு டெலிபோன் பண்ணி சொன்னா போதும் - கேஸோட போக்கே மாறிடும் - நீ உன்னோட உடம்பை எனக்குக் குடுக்க அடம் பிடிச்சியானா உம் புருஷன் தூக்குக்குப் போறதைத் தவிர வேற வழியே இல்லை.. உம் புருஷன் மேலே கேஸ் சார்ஜ் ஷீட்டை ஃபைல் பண்ணிட்டாங்க.. அடுத்த மாசம் இந்த தேதியில் கேஸ் கோர்ட்ல இருக்கும்..''

அவனையே இமைக்காமல் பார்த்தாள் நந்திதா.

''அப்படி யெல்லாம் முறைச்சுப் பார்த்து ஒரு பிரயோஜனமும் இல்லே நந்திதா. உம் புருஷனோட கேஸ்ல நான்தான் முக்கியமான சாட்சி. நான் சாட்சியத்தைக் கொஞ்சம் மழுப்பினாலும் போதும், கேஸோட தலைவிதியே மாறிடும்..''

ஒன்றும் பேசாமல் திரும்பி நடந்தாள் நந்திதா.

''என்ன பதில் சொல்லாமே போறே?''

''என்னோட உடம்பை அடகு வெச்சுத்தான் எம் புருஷனைக் காப்பாத்தணுங்கிற கேவலமான நிலைமை எனக்கில்லை. அவரை எப்படிக் காப்பாத்தறதுன்னு எனக்குத் தெரியும்.''



Mithra Vintha

"ரொம்ப சிரமப்படுவே.."

"பட்டாலும் பரவாயில்லை!" சொல்லி விட்டு - வேக வேகமாய் - பங்களாவின் காம்பௌண்ட் கேட்டை நோக்கி நடந்தாள் நந்திதா.



14

செஷன்ஸ் கோர்ட்

ஐந்தாவது சேம்பர். அசாத்தியமான கும்பல். நீளமான அந்த மரப் பெஞ்சின் நுனியில் கண்ணீர் நிரம்பிய கண்களோடு உட்கார்ந்திருந்தாள் நந்திதா. அவளுக்கு அருகே டாக்டர் சந்திரனின் மனைவி பத்மாவும், பத்மாவுக்கு அருகில் டாக்டர் சந்திரனும் உட்கார்ந்திருந்தார்கள்.

பத்மா நந்திதாவிடம் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள். "இதோ பாருங்க நந்திதா... நாம நியமிக்கிற வக்கீல் சாமான்யப்பட்டவரில்லை. கேஸ் ஜெயிக்கிற மாதிரி இருந்தால்தான் அவர் அட்டெண்ட் பண்ணுவார். அவர் என் கணவர் கிட்டே க்ளியரா சொல்லிட்டார். இந்தக் கேஸுக்குக் கண்ணால் பார்த்த சாட்சியம் எதுவும் கிடையாது. மிஸ்டர் ஞானேஷ் மதுரையில் இருந்ததுக்கான அலிபி ரொம்பவும் ஸ்ட்ராங்கா இருக்கு. அவர் தங்கியிருந்த மதுரை லாட்ஜ் மானேஜர் இந்தக் கேஸ்ல ஒரு அபாரமான சாட்சி. அந்தச் சாட்சியை வெச்சே கேஸை ஈஸியா உடைச்சுடலாம்னு சொல்லியிருக்கார் லாயர்... நீங்க தைரியமா இருந்தாத்தான் உங்க கணவரும் தைரியமா இருப்பார்."

பத்மா சொல்லிக் கொண்டிருக்கும் போதே -



இரண்டு கான்ஸ்டபிள்கள் சூழ - தளர்ந்த நடையுடன் மோவாய் நிறையத் தாடியுமாய் - கூண்டில் ஏறினான் ஞானேஷ்.

நந்திதாவின் கண்களில் நீர் தத்தளித்தது. நாசித் துவாரங்கள் விடைத்து உதடுகள் துடித்தன. சட்டென்று கீழே குனிந்து நெற்றியைப் பற்றிக் கொண்டாள்.

"என்னங்க... என்னாச்சு?" அருகேயிருந்த பத்மா பதை பதைத்துப் போய் நந்திதாவின் தோளைப் பற்றினாள்.

"அவரைக் கூண்டுல பார்த்ததும் மனசுக்கு எப்படியோ இருக்கு. தலையெல்லாம் சுத்தற மாதிரி இருக்கு."

சொல்லிக் கொண்டிருக்கும் போதே கண்கள் சோர்ந்தாள் நந்திதா. முகம் பூராவும் வியர்வை 'பொலு பொலு'வென்று அரும்பியது.

சந்திரன் அவசரக் குரலில் சொன்னான்.

"பத்மா! நந்திதாவை மெல்ல நடத்தி வெளியிலே நிக்கிற நம்ம கார்க்கு கொண்டு போயிடு. ஏதாவது கூல்ட்ரிங்க்ஸ் வாங்கிக் குடுத்து... கூட்டிட்டு வா.."

"நீங்களும் வாங்க."

கணவனிடம் சொல்லிவிட்டு - நந்திதாவின் தோளைப் பற்றி எழுப்பி - தன் மேல் சாய வைத்துக் கொண்டு வெளியே கூட்டிப் போனாள் பத்மா.

கோர்ட் காம்பௌண்ட்டுக்குள் - ஒரு மரத்துக்குக் கீழே நின்றிருந்த தன் அம்பாசிடர் காரின் கதவைத் திறந்து - பின்

Mithra Vintha

சீட்டுக்குச் சாய்வாய் உட்கார வைத்தாள் பத்மா. நந்திதா அப்படியே கீரைத் தண்டாய்த் துவண்டாள்.

"பத்மா!"

"என்னங்க?"

"என்னோட மெடிக்கல் கிட்டை முன் சீட்டுக்குக் கீழே வெச்சிருக்கேன்.. கொஞ்சம் எடு.. ஒரு ப்ரக் டோஸ் இன்செக்ஷன் போட்டு விடலாம்.."

மயக்கமாகி விட்ட நந்திதாவைப் பின் சீட்டுக்கு சாய வைத்து விட்டு முன் சீட்டுக்குப் போனாள் பத்மா. சந்திரன் நந்திதாவின் கையைப் பற்றி நாடி பிடித்தான். நாடி பிடிக்கப் பிடிக்க லேசாய் முகம் மாறினான்.

மெடிக்கல் கிட்டைக் கொண்டு வந்து நீட்டிய பத்மா கணவனின் முகத்தைப் பார்த்ததும் குழப்பமானாள். "என்னங்க ...என்னமோ மாதிரி ஆயிட்டீங்க?"

"பத்மா.. மெடிக்கல் கிட்டை அங்கேயே வெச்சுடு.."

"ஏங்க?"

"ட்ரீட்மெண்ட்டுக்கு அவசியமில்லே.."

"நீங்க என்ன சொல்றீங்க?"

நந்திதாவை அப்படியே விட்டுவிட்டு - காரை விட்டுக் கீழே இறங்கின சந்திரன் சிறிது பதட்டமான குரலில் சொன்னான் "நந்திதா கர்ப்பமா இருக்கா!"

நெற்றியைச் சுருக்கினாள் பத்மா. "நந்திதா... கர்ப்பமா.. அதெப்படிங்க முடியும்?"



"அதான் எனக்கும் புரியலை.. ஆனா என்னால கன்பர்மா சொல்ல முடியும்.. ஷி ஈஸ் ப்ரக்னன்ட்.."

"எக்ஸ்க்யூஸ் மீ... டாக்டர்.."

குரல் கேட்டுச் சந்திரன் திரும்பினான்.

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் தொப்பியைக் கக்கத்தில் இடுக்கியபடி தெரிந்தார். கேட்டார்: "ஞானேஷோட ஒய்புக்கு என்னாச்சு டாக்டர்?

"ம.. ம.. மயக்கம்.."

"மயக்கம் தெளிஞ்சுடுச்சா..?"

"இப்ப தெளிஞ்சுடும்.."

"ஞானேஷ் உங்க கூடப் படிச்சவர்தானே?"

"ஆமா இன்ஸ்பெக்டர்.."

"ஒரு நிமிஷம் அப்படி வர்றீங்களா டாக்டர்... உங்க கூட கொஞ்சம் பேசணும்..." நவநீதகிருஷ்ணன் இன்னொரு மரத்தடியை நோக்கி நகர - அவரைத் தொடர்ந்தான் சந்திரன். மரத்தடிக்கு வந்ததும் அவர் கேட்டார்.

"டாக்டர் ஒரு பெண் - அதுவும் கல்யாணமான ஒரு பெண் கர்ப்பமா இருக்காங்கிறது அவ்வளவு ஆச்சரியமான விஷயமா?"

"இன்ஸ்பெக்டர்..?"

"நீங்களும் உங்க மனைவியும் பேசினது எதேச்சையா என் காதுல விழுந்தது. நந்திதாவுக்கு என்னாச்சுன்னு விசாரிக்கத்தான்

MithraVintha

வந்தேன். பட்.. இந்தக் கேஸ்ல ஒரு முக்கியமான 'க்ளு' இப்பத்தான் கிடைச்சிருக்கு. நீங்க நந்திதா கர்ப்பம்ன்னு சொன்னதும் உங்க மனைவி தன் ∴பேஸ்ல ஆச்சர்யத்தைக் காட்டி அதெப்படிங்க முடியும்ன்னு கேட்டாங்க!

"ஏன், நந்திதா கர்ப்பம் ஆனதுல என்ன அவ்வளவு ஆச்சர்யம்?"

சந்திரன் அவஸ்தையாய்த் தலையைக் கோதிக் கொண்டான். "அது வந்து இன்ஸ்பெக்டர்..."

"ப்ளீஸ் டோண்ட் ஹைட் எனிதிங்.. இந்தக் கேஸ்ல நிறைய குழப்பம் இருந்தாலும் - ஞானேஷ்தான்... குற்றவாளியா இருக்க முடியும்ன்னு தீர்மானம் பண்ணி - கேஸை கோர்ட்டுக்கு கொண்டு வந்திருக்கோம் - ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக்கூடாதுங்கிறதுல நான் ரொம்பவும் ஜாக்கிரதையானவன். உங்க ஒய்ப் சொன்ன 'அதெப்படிங்க முடியும்?' என்கிற வார்த்தை மட்டும் என் காதுல விழலைன்னா நான் பாட்டுக்கு இந்நேரம் நந்திதா எப்படி இருக்கான்னு விசாரிச்சுட்டு - செஷன்ஸ் சேம்பர்க்கு திரும்பிப் போயிருப்பேன்... ப்ளீஸ் டாக்டர்... ∴ஸ்பீக் அவுட் த ட்ருத்.."

"இன்ஸ்பெக்டர்.."

"எஸ்.."

"நான் இப்போ சொல்லப் போகிற உண்மை ஞானேஷுக்கும் - அவனோட ஒய்ப் நந்திதாவுக்கும் தெரியாத உண்மை..." என்று ஆரம்பித்த சந்திரன் இரண்டு நிமிஷ நேரத்திற்குள் எல்லாவற்றையும் சொல்லி முடித்தான்.



நவநீதகிருஷ்ணன் தன் நெற்றியைச் சொறிந்து கொண்டே கேட்டார். "இந்த உண்மை ஞானேஷுக்கு நிச்சயமாய்த் தெரியாது."

"தெரியாது இன்ஸ்பெக்டர்..."

"ஒய்ப் நந்திதாவுக்கு.."

"தெரியாதுன்னு நினைக்கிறேன்.."

"அப்போ இந்த கர்ப்பம் எப்படி? நந்திதாவுக்கு நிச்சயமாய் இந்த கர்ப்ப மூலம் தெரிஞ்சிருக்கணும்.. நந்திதாவோட கேரக்டர் எப்படி?"

"அப்படி.. தப்பா நினைக்கத் தோணலை இன்ஸ்பெக்டர்."

"டாக்டர்! நீங்க சொன்ன அந்த ஆக்ஸிடெண்ட் நடந்து அஞ்சு வருஷ மாயிடுச்சு.. இந்த அஞ்சு வருஷ காலத்துல ஞானேஷ் கிட்டே இருந்த அந்த 'இம்பொடன்ஸி' நீங்கியிருக்க லாமில்லையா?"

"அதை நிவர்த்தி செய்ய முடியாதுன்னு அந்த டாக்டர் தீர்மானமாய்ச் சொல்லியிருந்தார் இன்ஸ்பெக்டர். இருந்தாலும் நீங்க சொன்ன பிறகு எனக்கும் லேசா சந்தேகம் வருது. ஞானேஷை இன்னிக்கே மெடிக்கல் செக்கப்புக்கு உட்படுத்திப் பாருங்க. உண்மை தெரிஞ்சுடும். ஞானேஷ் மூலமா நந்திதா கர்ப்பம் ஆகலைன்னா அந்த கேஸ்ல வேற யாரோ மறைமுகமா இன்வால்வ் ஆகியிருக்காங்கிறதைப் புரிஞ்சுக்கலாம்."

"ஏற்பாடு பண்றேன் டாக்டர்."

நவநீதகிருஷ்ணன் கோர்ட் சேம்பரை நோக்கி நடந்தார்.

MithraVintha



15

அதே தினம், மாலை ஆறு மணி.

ஞானேஷ் வீட்டு வாசலில் பைக்கை நிறுத்தி விட்டு உள்ளே போனார் நவநீதகிருஷ்னன்.. முன் அறையிலேயே சோபாவுக்குச் சாய்ந்து உட்கார்ந்து எதிர்ப்புற ஜன்னலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த நந்திதா சோகமாய்த் திரும்பினாள்.

"வாங்க இன்ஸ்பெக்டர்."

"இப்போ உனக்கு உடம்பு தேவலையாம்மா?"

நந்திதா தலையைக் குனிந்து கொண்டாள். எதுவும் பேச முடியாமல் நிமிஷ நேரம் தத்தளித்தாள். நவநீதகிருஷ்ணன் எதிரே இருந்த நாற்காலியில் தன்னைக் கிடத்திக் கொண்டபடி கேட்டார். "ஏம்மா... உன்னோட உடம்புக்கு என்னான்னு இந்நேரம் உனக்கே தெரிஞ்சிருக்கணுமே!"

"இ... இன்ஸ்பெக்டர்..."

"இனிமே நீ எதையும் மறைச்சுப் பிரயோஜனமில்லை.. உன்னோட கர்ப்பத்துக்குக் காரணம் யார்ன்னு தெரிஞ்சா... இந்த கேஸ் ஒரு முடிவுக்கு வந்துடும்.."

வாய் உலர்ந்து போய் மலங்க மலங்க விழித்தாள் நந்திதா. சேலைத் தலைப்பை எடுத்து நெற்றியில் அரும்பின வியர்வைத் துளிகளை ஒற்றிக் கொண்டாள். நவநீதகிருஷ்ணன் தொடர்ந்து சொன்னார். "உன்னோட கர்ப்பத்துக்குக் காரணம் உன்னோட புருஷன்தான்னு பொய் சொல்லிடாதே.. இதோ பார்த்தியா.. அரசாங்க டாக்டர் உன்னோட கணவரை தரோவா 'செக்'



பண்ணி - அவர் மூலமா எந்தப் பொண்ணுமே தாய்மை அடைய முடியாதுன்னு ஸ்ட்ராங்கா எழுதிக் குடுத்த ரிப்போர்ட்.."

நந்திதா கண்களில் சட்டென்று நீர் கோர்த்தன.

"இ.. ன்..ஸ்...பெ...க்..ட..ர்."

"சொல்லம்மா.. யார்.. அது?"

"யார்ன்னு எனக்குத் தெரியலை இன்ஸ்பெக்டர். இது... இந்தக் கர்ப்பம் எப்படி சாத்தியம்னு எனக்குத் தெரியலை."

"என்னம்மா முழுப் பூசணிக்காயை அதுக்குள்ள மறைக்கப் பார்க்கிறே? உனக்குத் தெரியாமே.. உன்னோட சம்மதம் இல்லாமே எப்படிக் கர்ப்பம் ஆகும்..? நீ தொடர்பு வெச்சிருக்கிற ஆசாமி யாருன்னு மாத்திரம் சொல்லு. போதும். மத்ததை நான் பார்த்துக்கிறேன்."

"எனக்குத் தெரியலை ஸார்."

"விஷயம் வெட்ட வெளிச்சத்துக்கு வந்த பின்னாடி - மூடி வெச்சு எந்த பிரயோஜனமும் இல்லேம்மா!"

அடுத்த விநாடி -

நந்திதா கைகளைக் கூப்பிக் கொண்டே மண்டியிட்டு உட்கார்ந்தாள். நாசி விம்ம கண்களில் நீர் மின்னியது. 'இன்ஸ்பெக்டர்... எனக்குக் கூடப் பொறந்தவங்க யாரும் கிடையாது.. உங்களை என் கூடப் பிறந்த அண்ணனா நினைச்சு சொல்றேன்... நான் வணங்கற அத்தனை சாமி சத்தியமா சொல்றேன்... என் கணவர் மூலமா எனக்குக் குழந்தை

Mithra Vintha

பிறக்காதுங்கிற உண்மை போன மாசமே எனக்குத் தெரியும்... ஆரம்பத்துல அதிர்ச்சியா இருந்தாலும் போகப் போக மனசைத் தேத்திக்கிட்டேன். எனக்கு யார் கூடவும் எந்தத் தொடர்பும் கிடையாது இன்ஸ்பெக்டர்... மென்சஸ் பீரியட் தள்ளிப் போன போதே எனக்குச் சந்தேகம் வந்தது. அதிகபட்சக் கவலையிலும் - அனிமீக்கா இருந்ததினாலும் டேட் தள்ளிப் போகிறதோன்னு நினைச்சேன்.. ஆனா இன்னிக்கு நான் கர்ப்பமாயிருக்கிறது கன்பார்ம் ஆயிடுச்சு. இது எப்படின்னு எனக்குப் புரியலை. நான் சொல்றதை நம்புங்க, இன்ஸ்பெக்டர்."

அந்த அழுகையில் உண்மை இருப்பது போல் தோன்றியது நவநீதகிருஷ்ணனுக்கு. "ஒரு ஆணின் தொடல் உணராமல் ஒரு பெண் எப்படிக் கர்ப்பமாக முடியும்?"

"நான் கேக்கிற கேள்விக்கு யோசிச்சு பதில் சொல்லம்மா... கடந்த நாற்பது நாளைக்குள்ளே யார் வீட்டிலாவது நீ தங்கியிருந்தது உண்டா?"

"இல்லே."

"உன்னோட கணவர் மதுரை போன சமயத்துல.. இரண்டு ராத்திரியும் வீட்ல தனியாத்தான் இருந்தியா?"

"ஆமாம்."

"முகுந்தனோட போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்படி உன்னோட கணவர் மதுரை போன முதல் நாள் ராத்திரியில் முகுந்தன் கொலை செய்யப்பட்டு இருக்கிறதா தகவல். கொலை உன்னோட வீட்டிலேயே நடந்து - பாடி அங்கேயே புதைக்கப் பட்டிருக்கணும். இதுவும் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் தர்ற தகவல். அந்த இரண்டு தகவல்களும் நடந்திருக்கக் கூடிய மகா



உண்மைகள். முகுந்தனைத் தாக்கிக் கொலை செஞ்சு அந்தப் பாடியைப் புதைக்கிற வரை அதே வீட்ல படுத்துத் தூங்கிட்டிருந்த உனக்குத் தெரியலை.. எப்பவும் காலையில் அஞ்சரை மணிக்கெல்லாம் கண் விழிக்கிற நீ அன்னிக்கு மட்டும் காலையில் எட்டேகால் மணிக்கு அதுவும் உன்னோட கணவர் மதுரையிலிருந்து வந்து கதவு தட்டும் போது கண் விழிச்சிருக்கே..! இதை ஏற்கெனவே நீ விசாரணையிலே சொல்லியும் இருக்கே.. இப்போ உன்னுடைய இந்தக் கர்ப்ப விவகாரம் எனக்கு ஒரு சந்தேகத்தைக் கிளப்பியிருக்கு.. முகுந்தன் கொலை செய்யப்பட்டு - புதைக்கப்பட்ட அந்த ராத்திரி நீ அசந்து போய்த் தூங்கலை. உன்னை யாரோ மயக்கத்துல ஆழ்த்தியிருக்காங்க.."

நந்திதா திடுமென்று நிமிர்ந்தாள்.

"இன்ஸ்.. பெக்.. டா்..."

"எஸ்... உன்னை யாரோ மயக்கத்துக்கு உட்படுத்தி யிருக்கணும். அன்னிக்கு ராத்திரி நீ தூங்கப் போகும்போது... யாராவது உன் வீட்டுக்கு வந்தாங்களா?"

"யாரும் வரலையே?"

"நல்லா யோசிச்சு சொல்லம்மா... ஆணோ பெண்ணோ யாராவது வந்தாங்களா...? எதையாவது சாப்பிடத் தந்தாங்களா?"

நந்திதா யோசித்துவிட்டுச் சொன்னாள். "அப்படி யாரும் வரலை இன்ஸ்பெக்டர்..! மில்க் பார்ல வேலை செய்யற பையன் அரை லிட்டர் பாலைக் கொண்டு வந்து குடுத்துட்டுப் போனதும் நான் வாசல் கதவைச் சாத்தி விட்டேன்.."

MithraVintha

"பாலா..?"

"ஆமா.."

"அந்த மில்க் பார் எங்கேயிருக்கு?"

"இந்தத் தெரு முனையிலே.."

"அதை நடத்துறது யாரு?"

"சுகுமார்ன்னு ஒருத்தர் - என்கிட்டே அக்கா... அக்கான்னு ரொம்பவும் ஒட்டுதலா இருப்பார்.. வீட்டுக்குத் தேவையான பாலை.. அவரோட.. மில்க் பாரிலிருந்துதான் வாங்கறது வழக்கம்.."

நவநீதகிருஷ்ணனின் முகத்தில் ஒரு பிரகாச ரேகை ஓடியது.

"அந்தப் பாலைக் குடிச்சியா?"

"குடிச்சிட்டுத்தான் தூங்கப் போனேன்.. படுத்ததும் தூங்கிட்டதா இப்போ ஞாபகம் வருது."

நவநீதகிருஷ்ணன் கையைச் சொடுக்கினார். "அந்தப் பாலில்தான் என்னமோ விஷமம் நடந்திருக்கு.. மறுநாள் காலையில அந்தப் பாலோட மிச்சம் கிண்ணத்துல இருந்திருக்காதே..."

"இல்லை.."

நவநீதகிருஷ்ணன் எழுந்தார்.





16

"பளீர்..." என்று கன்னத்தில் ஓர் அறை.

"ச்சத்..." என்று இடுப்பில் ஒரு பூட்ஸ் உதை.

"த்தங்" என்று முட்டி மேல் லத்தியால் ஒரு செமத்தியான அடி...

- இந்த மூன்றும் சேர்ந்து உற்பத்தி செய்து கொடுத்த இம்சையான வலியைத் தாங்கிக் கொள்ள மாட்டாமல் - லாக்கப்பின் மூலையோரமாய் மண்டி போட்டு உட்கார்ந்து நவநீதகிருஷ்ணனைச் சேவித்தான்.

"சொ ல் லி.. டறேன்.. ஸார்.."

"சொல்லு.."

கையிலிருந்த லத்தியால் முகத்தை ஏந்தினார், நவநீத கிருஷ்ணன். சுகுமார் நலிந்த குரலில் சொல்ல ஆரம்பித்தான்.

"நந்திதாவை நான் 'அக்கா'ன்னு வாயளவில் கூப்பிட்டாலும் அவங்களைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு ஆசை தோனும். அது தப்புன்னு மனசுக்குப் பட்டாலும் ஆசையை என்னால அடக்க முடியலை. டி.வி.யில் பார்த்த ஒரு சினிமாவில் - அதுல வர்ற ஒரு பெண்ணுக்கு பால்ல மயக்க மாத்திரை கலந்து குடுத்து - அவ சுய நினைவு இல்லாம இருக்கிறப்போ ஒருத்தன் கெடுக்கிறதைப் பார்த்தேன். அதே முறையைக் கையாண்டு - நந்திதாவையும் அனுபவிக்கத் திட்டம் போட்டேன். அவங்க ஹஸ்பண்ட் மதுரை போறதைத் தெரிஞ்சுக்கிட்ட நான் வழக்கமா தர்ற அரை லிட்டர் பாலில் மயக்க மருந்தைக் கலந்து - கடைப் பையன் மூலமா குடுத்து விட்டேன். நான் நினைச்ச மாதிரியே

Mithra Vintha

அவங்களும் அந்தப் பாலைக் குடிச்சிட்டுப் படுத்தாங்க. நான் கடையைப் பூட்டி விட்டு ஒரு மணி நேரம் கழிச்சு, நந்திதா வீட்டுப் பின்பக்கச் சுவரேறிக் குதிச்சு உள்ளே போனேன். நந்திதா மரக்கட்டை மாதிரி படுத்து அலங்கோலமாக தூங்கிக்கிட்டிருந்தாங்க. நான் என் மனசுல இருந்த ரொம்ப நாள் ஆசையை அவங்க கிட்டே தீர்த்துக்கிட்டேன். தான் கெடுக்கப்பட்டது நந்திதாவுக்குத் தெரியக் கூடாதுன்னு சேலையைத் திருத்திச் சுத்தம் பண்ணிட்டிருந்தேன். அந்த சமயத்துலதான் முகுந்தனும் பின் பக்கச் சுவரேறிக் குதிச்சு உள்ளே வந்தான். என்னையும் பார்த்துட்டான். நான் தற்காப்புக்காகக் கட்டிலுக்குக் கீழே கிடந்த - ஓர் இரும்புக் குழாயை எடுத்து அவனோட பின்னந் தலையில் அடிச்சுட்டேன். ஒரே அடியில் அவன் சாவான்னு நான் கொஞ்சம் கூட நினைச்சே பார்க்கலை. பாடியை அப்படியே விட்டுட்டுப் போனா நாளைக்கு நந்திதா பாதிக்கப்படலாம்ன்னு நினைச்சு வீட்டுக்குப் பின் பக்கமாகக் குழி தோண்டி - அவசர அவசரமா புதைச்சுட்டு ஓடிட்டேன். மறுநாள் ராத்திரி மழை பெய்ய ஆரம்பிச்சதும் - சரியா புதைக்கப்படாத பாடி வெளியே வந்துடுமோன்னு உதைப்பாயிடுச்சு.. கடையை மூடி விட்டு - ராத்திரி நந்திதா வீட்டுப் பின்பக்கச் சுவர் மேலே எம்பி பார்த்தேன். நந்திதாவும் அவங்க ஹஸ்பண்ட்டும் பாடி புதைச்ச இடத்தைக் கொத்திட்டிருந்தாங்க.. அவங்க போலீஸ்ல போய் கம்ப்ளைண்ட் பண்றதுக்கு முன்னாடி - நானே பப்ளிக் டெலிபோன் பூத்திலிருந்து போலீஸுக்கு போன் பண்ணிச் சந்தேகத்தை அவங்க மேலேயே திருப்பி விட்டேன்.."

சுகுமார் சொல்லச் சொல்ல -



அரசாங்கத்தின் மகா மட்டமான பழுப்பு நிறத் தாள்களில் ஸ்டேஷன் ரைட்டர் அந்த வாக்குமூலத்தை அழகாய்ப் பத்தி பத்தியாய் எழுதினார். அவன் முன்னே நீட்டினார்.

"போட்றா.. கையெழுத்தை!"

சுகுமார் நடுங்கும் கரங்களால் கையெழுத்தைப் போட்டான். ஸ்டேஷன் வாசலில் நின்றிருந்த டாக்டர் சந்திரன் உள்ளே வந்து நவநீதகிருஷ்ணனை ஏறிட்டான்.

"இன்ஸ்பெக்டர்! ஞானேஷை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகலாமா?"

"ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ணுங்க, டாக்டர். சில பார்மாலிட்டீஸ் இருக்கு. அது முடிஞ்சதும் கூட்டிட்டுப் போகலாம்."

அவர் சொன்ன அதே நேரம் - மேஜை மேலிருந்த டெலிபோன் கதறியது.

நவநீதகிருஷ்ணன் ரிஸீவரை எடுத்தார்.

"ஹலோ."

"போலீஸ் ஸ்டேஷன்..?" ஒரு பெண் குரல் கேட்டது.

"எஸ்.."

"இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன்."

"ஹோல்டிங்..."

"இன்ஸ்பெக்டர்! நான் டாக்டர் சந்திரனோட ஒய்ப் பத்மா பேசறேன்.."

Mithra Vintha

"மிஸஸ் பத்மாவா..? என்ன விஷயம்? சொல்லுங்க."

"என்னோட கணவர் அங்கே இருக்கிறாரா..?"

"என் முன்னாடிதான் உட்கார்ந்திட்டிருக்கார்... ஞானேஷைக் கூட்டிட்டுப் போறதுக்காகக் காத்துக்கிட்டிருக்கார்."

"இன்ஸ்பெக்டர்! நீங்க ஞானேஷையும், என்னோட கணவரையும் அழைச்சுகிட்டு உடனே வர முடியுமா..?"

"எங்கே?"

"ஞானேஷோட வீட்டுக்கு.."

"என்ன விஷயம்..? எனிதிங் இம்பார்ட்டண்ட்?"

"தி மோஸ்ட் இம்பார்ட்டண்ட் இன்ஸ்பெக்டர்... நந்திதா கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தூக்குப் போட்டுக்கிட்டு செத்துட்டா.."

நவநீதகிருஷ்ணனின் கையிலிருந்த ரிஸீவர் மெல்ல நடுங்கியது. லாக்கப்பில் இருந்த ஞானேஷையும் - தன் எதிரே உட்கார்ந்திருந்த டாக்டர் சந்திரனையும் கவலையாய்ப் பார்த்துவிட்டு ரிஸீவரில், 'புறப்பட்டு வந்திட்டிருக்கோம்..." என்றார்.

ரிஸீவரை வைக்கும்போது - நவநீதகிருஷ்ணனின் காக்கி உடைக்குள் இருந்த அந்த இதயம் கனத்துப் போயிருந்தது.

★ ★ ★

MithraVintha